படிப்பகம்
மாநகர சபை யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 14 வியாழக்கிழமை (30.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316




## கொழும்பு மாநகர சபையின் நடவடிக்கைகள் நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டு சகல அதிகாரங்களும் கொண்ட விசேட ஆணையாளரின் கீழ் நிர்வாகம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே கொழும்பு மாநகர முதல்வர், பிரதி முதல்வர் உட்பட அனைத்து உறுப்பினர்களின் அதிகாரங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு முதல்வரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் கையளிக்கப்பட வேண்டும் என்றும் மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோட் குரே உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

கொழும்பில் முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போதே முதலமைச்சர் றெஜினோட் குரே இவ் உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிட்டார்.

இந் நிகழ்வில் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முதலமைச்சர் கருணாநிதியை இலங்கை வருமாறு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய அரசின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது நாட்டிலுள்ள தமிழ் சகோதரர்களுக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் மொழி உரிமைகள் உள்ளடங்கலாக ஜனநாயக மற்றும் அரசியல் உரிமைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# முறிகண்டி-அக்கராயனில் மோதல்

# 60 படையினர் பலி; 100 பேர் காயம்

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

முறிகண்டி-அக்கராயன் வீதியில் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்னகர்வுத் தாக்குதலுக்கு எதிரான முறியடிப்புத் தாக்குதலில் 60 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 100றக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்கு ஆசிரியர் சங்க யாழ்.கிளை ஆதரவு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி ஆசிரியர்கள் இன்று நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் ஒருநாள் சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

நீண்ட காலமாக இருந்துவரும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை முன்வைத்து ஆசிரியர் சங்கங்களினால் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அதிகாரமோ தெரிவு செய்யப்பட்ட சில அதிகாரிகளின் சம்பளங்களை மட்டும் உயர்த்தி ஆசிரியர் தொழிலை கொச்சைப்படுத்தி வருகின்றது.

கைவிடப்பட முடியாத சம்பள முரண்பாட்டுத் போராட்டத்தில் ஒருகட்டமாக 2008 அக்டோபர் 30ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்புத் தாக்குதலில் பெண் படுகாயம்

(கொழும்பு)

களனி திஸ்ஸ அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட வான் தாக்குதலையடுத்துப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட விமான எதிர்ப்புத் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வத்தளை ஹுணுப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே கால்களில் காயமடைந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது குழந்தைகளுடன் உறங்கிக் கொண்டிருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா செல்லும் பான் கீ மூன் இலங்கை குறித்தும் பேசுவார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் இன்று இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்தியாவின் முன்னணித் தலைவர்களைச் சந்திக்கும் அவர், இரண்டு நாள்கள் இந்தியாவில் தங்கியிருப்பார்.

இந்த விஜயத்தின்போது பான் கீ மூன் இலங்கை இனப் பிரச்சினையின் தீர்வு தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல தடவைகள் பான் கீ மூன் இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார் என்பது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயபுரம் படையினர் வசம்

(கொழும்பு)

வட இலங்கையில் வன்னிக் களமுனைகளில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தாக்குதலை மேற்கொண்டுள்ள இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரப் பகுதியாகிய ஜெயபுரம் என்ற இடத்தை நேற்றுக் காலை கைப்பற்றியிருப்பதாக இராணுத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

மன்னார்-பூநகரி வீதியாகிய ஏ-32 வீதியில் நாச்சிக்குடாவுக்கு அப்பால் அமைந்துள்ள இந்தக் கிராமத்தைக் கைப்பற்றியதுடன் அங்கிருந்து கிழக்காக அமைந்துள்ள அக்கராயன் குளத்தின் முழுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இலக்குகள் மீதான புலிகளின் வான் தாக்குதல்கள் முறியடிப்பு

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் மீதும் மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் மீதும் நேற்று முன்தினமிரவு புலிகளின் இலகு ரக விமானம் தாக்குதல் நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல்களில் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்துக்கோ மன்னார் தள்ளாடி இராணுவ முகாமுக்கோ பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது.

களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் மீது புலிகளின் இலகு ரக விமானம் நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் இரண்டு குண்டுகளை வீசியுள்ளது. இதனால் மின் உற்பத்தி (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ராடர் கருவிகள் மீதும் இயக்குவோர் மீதும் சந்தேகம்

### ஜே.வி.பி. கூறுகின்றது

(கொழும்பு)

மன்னாரிலும் கொழும்பிலும் விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியதன் பின்னணியில் இந்திய ராடர் கருவிகள் மீதும் அதனை இயக்கும் இந்தியப் படையினர் மீதும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஜே.வி.பியினர் புலிகளின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டதாக அரசாங்கம் வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது என்பது இத் தாக்குதல் மூலம் நிரூபணமாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விஜிதஹேரத் மேலும் தகவல் தருகையில்,

புலிகளின் விமானங்கள் மன்னாரிலும் கொழும்பிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்குநர் சீமான், அமீர் பிணையில் விடுதலை

இந்திய அரசுக்கு எதிராக பேசியதாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட திரைப்பட இயக்குநர்களான சீமான் மற்றும் அமீர் ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இராமேஸ்வரத்தில் ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து நடைபெற்ற பிரமாண்ட பொதுக் கூட்டத்தில் இந்திய அரசுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் பேசியதாக திரைப்பட இயக்குநர்களான சீமான் மற்றும் அமீர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் பிணை மனுவை விசாரணை செய்த இராமேஸ்வரம் நீதிமன்றம் ஒரு வார காலத்திற்கு மதுரையில் தங்கியிருந்து தினமும் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் விடுதலை செய்தது. (ச-5)

## மெலமைன் பதார்த்தம் கலந்துள்ள உணவுப்பொருட்களின் விற்பனைக்குத் தடை

### யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மெலமைன் பதார்த்தம் கலந்துள்ள உணவுப் பொருட்களின் விற்பனை யாழ்.குடாநாட்டில் மறு அறிவித்தல் வரும்வரை தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் பல உணவுப் பொருட்களில் மெலமைன் எனும் நச்சுப்பதார்த்தம் இருப்பது கண்டறியப்பட்டு அவற்றின் விற்பனையும், பாவனையும் தடை செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியாக அறிவிக்கப்பட்ட மெலமைன் கலந்திருப்பதாக சந்தேகிக்கப்படும் உணவுப்பொருட்களின் பட்டியலை இலங்கையின் மத்திய சுகாதார அமைச்சு சுற்றறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இப்பட்டியலில் உள்ள சந்தையில் காணப்பட்ட உணவுப்பொருட்களின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்பரிசோதனை முடிவுகள் வரும்வரை இப்பொருட்களின் விற்பனை, பாவனை இலங்கையில் மறுஅறிவித்தல் வரை தடைசெய்யப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்திலும் இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உணவு விற்பனை நிலையங்களை சோதனையிடுவர். தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் எதுவும் இருப்பின் அவற்றின் விற்பனையை மறு அறிவித்தல்வரை தடை செய்வர்.

உணவு மாதிரிகளின் பரிசோதனை முடிவுகள் கிடைத்தபின் இப்பட்டியலிலுள்ள உணவு பொருட்களின் விற்பனையை அனுமதிப்பதா அல்லது முற்றாக அழிப்பதா என்ற இறுதி முடிபை மத்திய சுகாதார அமைச்சு அறிவிக்கும்.

மறுஅறிவித்தல் வரை இவ்வுணவுப்பொருட்களை பாவிக்க வேண்டாமென பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் பட்டியலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், வலம்புரிக் காரியாலயத்திலும் பார்வையிட முடியும். (ச)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய விசேடகல்விப் பிரிவினரால் நிக்கொட்டின் அனுசரணையுடன் நடாத்தப்படும் யாழ்.வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆரம்பகல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதி வரை கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## திறந்த பல்கலைக் கழகத்தின் விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நாட் பாடசாலை விரிவுரைகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் சிங்கள கற்கைநெறிக்கான மீள் பரீட்சை IIIஎதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறும் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## புலமைப் பரிசில் பரீட்சை மதிப்பீடு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைபரிசில் பரீட்சையின் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணியில் இடம்பெற்ற குளறுபடிகளால் யாழ்.மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து, அதற்கு நிவாரணம் கோரி யாழ். மாவட்ட மாணவர்களின் பெற்றோர்கள் தாக்கல் செய்த மனு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கை விசாரணைசெய்த நீதிவான் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் புலமை பரிசில் வினாத்தாள் திருத்தல் தொடர்பான முறைகுறித்து விளக்கமளிக்குமாறு பரீட்சை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவ் வழக்கின் எதிர் மனுதாரர்களாக பரீட்சை ஆணையாளர், கல்வி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆங்கிலம் கற்பிப்பதற்கான 10 நாள் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நிக்கோட் செயற்றிட்டத்தின் கீழ் தீவகக் கல்வி வலயத்தில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான 10 நாள் பயிற்சி நெறி வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை யாழ்/வண். நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் காலை 8.30 மணிக்கு முன்பாகச் சமுகமளிக்குமாறு தீவககல்வி வலய ஆங்கில உதவிக்கல்விப்பணிப்பாளர் க.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார். (ச)

## செயலமர்வுகள்

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 2ஆம் வருடத்திற்கான செயலமர்வுகள் நவம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதென சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்.பிராந்திய இணைப்பாளருமான திருமதி.த.வில்வநாதன் அறியத்தந்துள்ளார். (ஓ)

## வலிகாமம் கல்விவலய உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

16 வயதுக் பிரிவினருக்கான போட்டிகள் நாளைக்காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்திலும், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

இப்போட்டியில் 16 பாடசாலைகளின் அணிகள் மோதவுள்ளன.

18 வயது பிரிவினருக்கான போட்டிகள் எதிர்வரும் 4ஆம் திகதி மேற்படி இருமைதானத்திலும் நடைபெறும் என வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் நடராஜா அறிவித்துள்ளார்.

## உயிரிழந்த மூவரும் அடையாளம் காணப்பட்டனர்

(கிளிநொச்சி)

பரந்தன் குமரபுரம் கிராமத்தில் உள்ள பாடசாலைக்கு அருகான மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப்படை நேற்று முன்தினம் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டனர். கொல்லப்பட்ட மூவரின் சடலங்களையும் அவர்களின் உறவினர்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

பூநகரியைச் சேர்ந்தவர்களான சங்கரலிங்கம் சிவநாதன் (வயது 36), சிவநாதன் சிவமணி (வயது 24) தங்கநாதன் சிவநேசன் (வயது 29) ஆகியோர் கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். (ச-5)

## இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு சேவைகள் நிறைவை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப்போட்டியின் இறுதி நிகழ்வுகள்இன்று நடைபெறவுள்ளது.

18ஆவது உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் மோதுகின்றது.

வலைபந்தாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி மோதுகின்றது.

அதேவேளை ஏற்கனவே நடந்து முடிந்த போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வுகளும் இன்று நடைபெறும். (ச)

## விலங்கு இழையங்களைப் பயன்படுத்தி செயற்கை இருதயம் உருவாக்கம்!

மனிதனின் சொந்த இருதயத்தை ஒத்த செயற்பாடுகளைக் கொண்ட செயற்கை இருதயம் ஒன்றை பிரான்ஸ் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

இருதய இயக்கம் பாதிக்கப்பட்ட, இருதய மாற்று சிகிச்சை ஒன்று சாத்தியமற்ற நோயாளிகளுக்கு இந்த செயற்கை இருதயமானது வரப்பிரசாதமாக அமையும் என மேற்படி ஆய்வுக்கு தலைமைதாங்கிய பிரான்ஸின் பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி அலெய்ன் கார்பெண்ரியர் தெரிவித்தார்.

கடந்த 15 வருட கால ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்ட இந்த செயற்கை இருதயம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு பாரிசில் இடம்பெற்றது.

உயிரியல் இரசாயன இழையங்களைப் பயன்படுத்தி முழுமையான செயற்கை இருதயம் உருவாக்கப்படுவது உலகில் இதுவே முதல் தடவையாகும் என மேற்படி இருதயத்தை உருவாக்கியுள்ள உயிரியல் மருத்துவ கம்பனியான கார்மட் இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பற்றிக் கொலம்பியர் தெரிவித்தார்.

இந்த உயிரியல் இரசாயன இழையங்களானது விலங்குகளின் இழையங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டமையால் அவற்றை மனித உடல் நிராகரிப்பதற்கான வாய்ப்பு குறைவாகவுள்ளது என அவர் கூறினார்.

கார்மெட் நிறுவனமானது பொது மற்றும் இராணுவப் பாவனைக்கான விமானங்கள், எறிகணைகள், விண்கலங்கள் என்பவற்றை உருவாக்கி சந்தைப்படுத்தி வரும் விண்வெளி மற்றும் விமானப் பாதுகாப்புக் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேலும்15 புதிய செயற்கை இருதயங்களை உருவாக்க கம்பனி திட்டமிட்டுள்ளது. இந்த இருதயங்களை எதிர்வரும் 2 அல்லது 3 வருடங்களில் மனிதர்களுக்கு பொருத்தும் பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

1980களில் இருந்து செயற்கை இருதயங்களை உருவாக்குவதற்கான அனேக ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் அனேகமானவை இருதய மாற்று அறுவைச் சிகிச்சை வரை நோயாளியின் உயிரைத் தக்க வைப்பதற்கு உபயோகிக்கப்பட்டன.

எனினும் அவை எதுவுமே நீண்டகால அடிப்படையில் மாற்று இருதயமாக இயங்கும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. அந்த செயற்கை இருதயங்களைப் பொருத்துவதால் ஏற்படும் ஒவ்வாமை எதிர்விளைவுகள் மற்றும் குருதி உறைதல் போன்ற பிரச்சினைகள் காரணமாகவே அவற்றினை நோயாளிக்கு நிரந்தரமாக உபயோகிப்பது சாத்தியமற்று இருந்தது.

ஆனால் இப்புதிய மிருக இழையங்களால் உருவாக்கப்பட்ட செயற்கை இருதயமானது குருதி உறையும் அபாயம் குறைந்தது என ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (ச-5)



புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய வாணிவிழாவில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கன் மங்கல விளக்கேற்றுவதையும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## பட்டத்தகைமை பெற்ற மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்லவுள்ள யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பட்டத்தகைமை பெற்றவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத் தின் ஆங்கிலமொழி ஆய்வு கூடத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட வேண்டியிருப்பதால் இக் கலந்துரையாடலுக்கு அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு பணிப்பாளர் கே.கதிரமலை அறிவித்துள்ளார். (ஓ)

# இன்று ஒரு தகவல்

## மருத்துவமனை பண்பாடுகள்

நமக்கு வேண்டப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரைப் பார்த்து நலம் விசாரிக்கப் போகிறோம். அந்த சமயத்தில் நாம் எப்படி நடந்து கொள்வது? என்பதைப் பற்றி அமெரிக்க டாக்டர் ஒருவர் சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்.

நோயில் படுத்திருக்கும் ஒருவர் விரைவில் குணமாகி எழுந்திருப்பது, அவரைப் பார்க்கப் போகிறவர்களைப் பொறுத்தும் இருக்கிறதாம்.

ஒரு நோயாளி ஒரு அறையில் தனியாக படுத்திருக்கிறார் என்றார். அந்த 'தனிமையே' அவருக்கு ஒரு சிகிச்சை மாதிரி! அந்தத் தனிமையைக் கெடுப்பது போல் நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது. திடீரென அறைக்குள் சென்று அவருக்கு ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையோ ஏற்படுத்தக் கூடாது. கதவைத் தட்டி அனுமதி கேட்டுப் போவது தான் நாகரிகம்.

உள்ளே போனதும் அங்கிருக்கும் மருத்துவ சாதனங்கள் – படுக்கை வசதிகள் இவற்றை யெல்லாம் பார்த்து விட்டு குறை கூறக்கூடாது.

ஏதாவது குறையிருந்தால் அதை டாக்டரிடம் அல்லது தாதியிடம் சொல்லலாமே தவிர நோயாளியின் காதில் விழக் கூடிய மாதிரி சொல்லக்கூடாது. நமக்கு சிகிச்சை அளிக் கும் கருவிகள் சரியில்லை என்று நோயாளி நினைக்க ஆரம்பித்தால் நிலைமை மோசமாகி விடும். நோயாளியின் கையை குலு க்குவதானாலும் அவரின் உடம்பை தொட்டுப் பார்க்க வேண்டு மானாலும் அதை பக்குவமாக செய்ய வேண்டும்.

உங்கள் பலத்தையெல்லாம் அங்கு காட்டாதீர்கள் நிதானம் –பரிவு–அன்பு என்பவற்றை மறந்து விடக்கூடாது.

நோயாளியின் பக்கத்தில் இருப்பதற்கு இடம் இருந்தால் இருந்தே பேசுங்கள். நம்மை பார்ப்பதற்காக வந்திருப்பவர் நின்று கொண்டிருக்கிறாரே என்ற எண்ணம் நோயாளிக்கு மனவேதனையைக் கொடுக்கலாம். நோயாளியிடம் ஆறுதலாக நான்கு வார்த்தை பேசுவதாக நினைத்துக்கொண்டு ,

"ஐயோ பாவம் ! முன்பெல்லாம் இந்த உடம்பு எவ்வளவு திடகாத்திரமாக இருந்தது. இப்பொழுது இப்படி ஆகி விட்டதே... என்று சொல்லக்கூடாது. அது அவருக்கே தெரியும்.

எப்பொழுதும் நோயாளியிடம் அவருடைய நோயைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல! உங்களுடைய பேச்சு அவருக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

"என் உதவி ஏதாவது உங்களுக்கு தேவையா உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேளுங்கள். இப்படி நீங்கள் கேட்பதால் நோயாளிக்கு தன் உடல் நலத்தில் அக்கறையுள்ள ஒருவரைப் பார்த்த தெம்பும் உற்சாகமும் ஏற்படும். மனநிம்மதி கிடைக்கும்.

முடிந்தால் , மருத்துவ மனை அலு வலர்கள், தாதிமார்கள் அவர்களிடமும் பேசிப் பாருங்கள் நோயா ளியிடம் நீங்கள் பார்க்கும் மாறுதல், முன்னேற்றம் இதை யெல்லாம் சொல்லி அவருடைய நல் வாழ்வில் உங் களுக்கு அக்கறை இருக்கிறது என்பதை காட்டிக் கொள்ளுங்கள்.

இதனால் நோயாளியைப் பற்றி கவலைப்பட யாருமே இல்லையே என்ற எண்ணம் அவர்களின் மனதை விட்டுப் போய் விடும். நோயாளியிடமிருந்து.எப்பொழுது விடை பெற வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில வகை நோயாளிகளிடம் சில நிமிடங்கள் இருந்தால் போதும்.

நீங்கள் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்பது முக்கியமில்லை. உங்களால் அவருக்கு எந்தளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பது தான் முக்கியம்.

ஒரு நோயாளியைப் பார்க்கப் போகும்போது கையில் ஒன்றும் கொண்டு போகவில்லையே என்ற கவலை உங்களுக்குத் தேவையில்லை! அவர் இருக்கும் நிலைமையில் உங்கள் கையில் என்ன இருக்கிறது என்றெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கமாட்டார்.

நோயாளிக்கு டாக்டர் சிகிச்சையளிக்கிறார். நீங்கள் தான் அவருக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுக்க வேண்டும் அது தான் உங்கள் வேலை.

சில நாட்களுக்கு முன் என் நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். அவருக்கு தெரிந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் "அட்மிட்" ஆகியிருக்கிறாராம். அவரின் நிலைமை எப்படி என்று போய்ப் பார்த்து விபரம் எழுது என்று எழுதியிருந்தார்.

நானும் போய் அவரிடம் என்னை அறிமுகப்படுத்தி பேசிக் கொண்டிருந்தேன். பத்து நிமிடம் கழித்து "உடம்பை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன்.

அவர் "எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. என் தம்பிக்குத் தான் நெஞ்சுவலி" என்றார். "அவர் எங்கே?" என்றேன்.

"எக்ஸ்ரே எடுக்கப் போயிருக்கிறார். இந்த பெட் சும்மா தானே இருக்கிறது என்று கொஞ்ச நேரம் படுத்திருந்தேன்! நான் துணைக்கு வந்த ஆள்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையின் வான் பாதுகாப்பு தொடர்பில் ஐ.தே.க சந்தேகம்

இலங்கையின் வான் பாதுகாப்பு மற்றும் விமானத் தளங்களின் பாதுகாப்புக் குறித்து சந்தேகம் தோன்றியிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறிய ரக விமானமொன்றை வைத்துக் கொண்டு இது வரை 7 தடவைகள் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதாக நேற்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியளாலர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறினார்.

ஆனால் அரசாங்கத்திடம் கிபீர், மிக் உள்ளிட்ட நவீனரக விமா னங்கள் இருக் கின்ற போதும் விடுதலைப் புலிக ளின் இலகுரக விமானங்களை அழிக்க முடியாதிருப்பதாகவும் ஒவ்வொரு முறையும் விடுதலைப் புலிகளின் விமானங் கள் தாக்குதல்நடத்தும்போதும்அவற்றைஅழித்து விட்டதாக பாதுகாப்புத் தரப்பில் கூறப்படுவதில் உண்மை இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இறுதியாக வவுனியா வில்நடத்தப்பட்ட வான் தாக்குதலின் பின்னர் விடுதலைப் புலிகளின் விமானங்களைத் துரத்திச் சென்ற வான்'படையினர் அதனை அழித்து விட்டதாகக் கூறப்பட்டது.

விமான ஓடு பாதைகள் அழிக்கப்பட்டு விட்டன என்றும் கூறப் பட்டன. ஆனால் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் இரண்டு விமானங்களையும் எடுத்து வந்து தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றுள்ளனர்.எனதயாசிறிஜெயசேகர கூறினார்.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் என்ன வகையிலானவை அவற்றை அழிப்பதற்கு என்ன ஆயுதங்கள் தேவை போன்ற விபரங்களை தாம் கூறியிருந்த போதும் அரசாங்கம் அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையென அவர் குற் றம் சாட்டினார்.

இதே வேளை இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தாம் முன்வைத்த கோரிக் கைகளை இந்தியா ஏற்றுக் கொண் டிருப்பதாகக் கூறுவதாகவும் அதே நேரம் தமிழக முதல்வர் கருணாநிதி தான் வெற்றி பெற்றிருப்பதாக கூறு வதாகவும் ஜெயசேகர குறிப் பிட் டார்.

உண்மையில் யார் வெற்றி பெற்றார்கள் என்பது தெரியாதிருப்பதாகச்சுட்டிக்காட்டியஅவர் இலங்கைக்கு இனப் பிரச்சினைத் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதை தலைவர் ரணில் விக்கிரம சிங்க கடந்த5வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்த போதும் தற்பொழுதே ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அதனைக்கடைப்பிடிக்க முன் வந்தி ருப்பதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வெனின் அது 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமை யாக அமுல் படுத்துவதா அல்லது அதற்கு அப்பாற்பட்டதா என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண் டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.(ஓ)

# ஹொரணை களுப்பானவில் தமிழ் மக்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள இறப்பர் தோட்டமான ஹொரனை களுப்பானவில் தமிழ் குடும்பம் ஒன்றின் மீது சுமார் 15 சிங்களவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றுள்ளது. இதனையடுத்து அருகில் இருந்து பல தமிழ் குடும்பங்கள் காட்டுக்கு தப்பியோடியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமைச்சர் பி. சந்திரசேகரன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புகளுக்கு ஆதரவு தெரிவித்தமையை அடுத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. களுப்பானை தோட்டத்தில் சுமார் நூறு தமிழ் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் களுப்பானதோட்ட தமிழ் மக்கள் தஹொரனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தாக்குதலின் போது இலங்கையில் உள்ள அனைத்து தமிழர்களும் வெளியேற்றப்படுவர் என தாக்குதலை நடத்தியவர்கள் சத்தமிட்டதாக களுப்பான தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ)

# ஆசிரியர் சங்கங்களின் ஒன்றிணைந்த போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ளமுன்னணி ஆசிரியர் தொழிற்சங்கங் கள் ஒன்றிணைந்து இன்று வியாழக்கிழமை சுகவீனப் போராட்டத் தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன.

நீண்ட காலமாக இழுபறியில் இருந்து வரும் ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்து வைக்குமாறு கோரி இவ் சுகவீனப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கைஆசிரியர்சங்கம் உட்பட 11 தொழிற் சங்கங்கள் இணைந்து சுகவீனப் போராட்டம் தொடர்பாக "ஆசிரியர் சங்கங் களின் ஒன்றிணைந்த போராட்டம்" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. (ஓ)

# இராசி பலன்

30.10.2008
(ஐப்பசி 14 ,வியாழக்கிழமை
பிரதமை காலை 6.06மணிவரை
விசாகம் முன்னிரவு 11.04மணிவரை
இராகுகாலம் 1.33- 3.03மணிவரை
சுபநேரம்7.33-9.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல்,காரிய தாமதம், தந்தை வழிஉறவு ,பிரயாணம். |
| இடபம் | அமைதிக்குறைவு,காரிய தடங்கல், அபகீர்த்தி, பிரயாணபயம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி,அபூர்வ சந்திப்பு,போசன சுகம். |
| கடகம் | உற்சாகம்,தடைப்பட்ட காரியம் கைகூடும்,பகைவரால் நன் மை, போசன நன்மை. |
| சிங்கம் | புத்திரரால் கவலை,முயற்சி தாமதம்,பணவிரயம்,ரோகநிலை. |
| கன்னி | தாய்வழிஉறவு, மனச்சஞ்சலம், பணவிரயம், காரிய தாமதம். |
| துலாம் | கூட்டு முயற்சி, பணவருவாய் ,பிரயாணம், விருந்துபசாரம் |
| விருச்சிகம் | வீண்மனஸ்தாபம், எடுத்த காரியம் தாமதமாகும்,குடும்பக் கவலை,பண விரயம். |
| தனுசு | கற்பனை மிகுதி,போசனசுகம், தொழில் நன்மை, காரிய சிந்தை. |
| மகரம் | பிரயாணக் கஷ்டம், பண விரயம், காரிய தாமதம்,நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |

வளவன்

# பாபுல்,பீடா,பான்பராக் இறக்குமதிக்குத் தடை

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

மனிதர்களுக்கு புற்று நோயை ஏற்படுத்தும் பாபுல் ,பீடா ,பான்பராக் போன்றவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்வதை முழுமையாக தடை செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை முற்றுகையிட்டு சட்ட நடவடிக்கைஎடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாபுல், பீடா, பான்பராக் போன்றவற்றால் புற்று நோய் ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதோடு இலங்கை மக்கள்அவற்றுக்கு அடிமையாகி வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

பொது மக்களின் நலனை கருத்திற் கொண்டே இவற்றை இலங்கையில் தடை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ-6)




யாழ் அரிமாக்கழக புற்று நோயளர் நலன் திட்டத்தில் இருந்து 25 வறிய புற்று நோயாளருக்கான தலா ரூ.1500 நிதி வழங்கும் நிகழ்வு அண்மையில் வட மாகாண புற்று நோய் எயிட்ஸ் நோய் தடுப்பு சங்க பணிமனையில் நடைபெற்றது. சங்கத்தின் உப தலைவர் த.கனகசபை இந் நிதி வழங்குவதை படத்தில் காணலாம்.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

பகுதி A பரீட்சை XVI **நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1 $2\times($ [illegible] $-1)$ ..................

2 $\frac{1}{7}$ [illegible] $\frac{5}{7}$ ..................

3 $3$ [illegible] $\times x$ ..................

4 $\frac{50}{100} = \square$ % ..................%

5 ஒரு முக்கோணியின் அகக் கோணங்களின் கூட்டுத்தொகை ..................°

6 $A\hat{O}B$ இனால் குறிக்கப்படும் கோணத்தின் உச்சி ..................

7 9cm பக்கமுடைய சதுரத்தின் பரப்பளவு ..................$cm^2$

8 4,7,10,13.......... என்ற கூட்டல் விருத்தியின் பொதுவித்தியாசம் ..................

9 $\sqrt{81}$ சமன் ..................

10 6 இலும் குறைந்த எல்லா முதன்மை எண்களும் ..................

### B — Answer

1 $(-2)^3$ இன் பெறுமானம் யாது? ..................

2 $\frac{1}{2}+\frac{1}{8}$ ஐச் சுருக்குக. ..................

3 $2y\times y$ இன் பெருக்கத்தை தருக ..................

4 25% ஐ எளிய பின்னமாக தருக. ..................

5 கோணங்களின் அடிப்படையில் சமபக்க முக்கோணி எத்தகையது. ..................

6 $A\hat{O}B$ இன் இரு புயங்களையும் எழுதுக ..................

7 $100cm^2$ பரப்பளவுடைய சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது? ..................

8 $n^{ம்}$ உறுப்பு 3n-8 ஆகவுள்ள கூட்டல் விருத்தித் தொடரில் $6^{ம்}$ உறுப்பு யாது? ..................

9 $x^2 = 81$ ஆயின் $x$ இன் பெறுமானம் யாது? ..................

10 முகங்களில் 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட கோடாத தாயக் கட்டை ஒன்றைச் சுண்டும் போது முதன்மை எண் பெறப்படுவதற்கான நிகழ்தகவு யாது? ..................

### C — Answer


1 $(-3)\times(4)+3$ இன் பெறுமானம் ..................

2 $1\frac{1}{2}$ இன் $\frac{1}{3}$ எவ்வளவு? ..................

3 $2x(x+1)+x(x-2)$ ஐ சுருக்குக. ..................


4 ரூபா 250 இன் 10% ஐ காண்க. ..................

5




a) x இன் பெறுமானம் எவ்வளவு a)..................
b) y இன் பெறுமானம் எவ்வளவு b)..................

6




a) x இன் பெறுமானம் எவ்வளவு a)..................
b) y இன் பெறுமானம் எவ்வளவு b)..................

7 ஒரு சதுரத்தின் மூலைவிட்டம் xcm எனின் சதுரத்தின் பரப்பளவிற்கான ஒரு கோவையை x இல் தருக. ..................

8 $n^{வது}$ உறுப்பு 7-4n ஆகவுள்ள கூட்டல் விருத்தித் தொடரில் முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகை ஐக் காண்க. ..................

9 $(0.001)^x = 10$ எனின் $x$ இன் பெறுமானம் யாது? ..................

10 $1728 = 2^6 \times 3^3$ எனின் $(1728)^{\frac{1}{3}}$ இன் பெறுமதியைக் காண்க? ..................

### D — Answer

**1**

1 $x=-2$ , $y=3$ எனின் $x^2-3xy$ இன் பெறுமானம் யாது? ..................

**2**

சுருக்குக.

$$\left(\frac{5}{9}+\frac{1}{2}\right)\div 1\frac{1}{3}$$

..................

**3**

சுருக்குக.

$x(a+2)-5(ax+1)$


..................

**4**

விமலின் சம்பளம் ரூபா 16500.அவன் அதில் 70% ஐச் செலவிட்டால் அவன் சேமிக்கும் தொகையைக் காண்க.

..................

**5**




உருவில் $\angle BCD$ இன் இருசூறாக்கி CY ஆகும்.

a) $\angle$ ACB இன் பெறுமானத்தைக் காண்க.

b) $\angle$ AYC இன் பெறுமானத்தைக் காண்க.


c) $\triangle$ ABC இல் மிக நீண்ட பக்கம் யாது?

a)..................

b)..................

c)..................

**6**




உருவில்

a) $\angle$ ADB இன் பெறுமானம் யாது.

b) AB இற்கு சமனான பக்கத்தை எழுதுக.

c) AC,AD ஐ சமனிலி குறியீட்டால் தொடர்புபடுத்துக.

a)..................

b)..................

c)..................

**7**

ஒரு சதுரமுகியின் மொத்த மேற்பரப்பளவு $54cm^2$ எனின் அதன் ஒரு பக்க நீளம் எவ்வளவு.

..................

**8**

மாணவன் ஒருவன் முதலாம் மாதத்தில் ரூ10, இரண்டாம் மாதம் ரூ15,மூன்றாம் மாதம் ரூ20 என்றவாறு பணத்தைச் சேமித்தான்.

a)அவ்வெண்கள் மூலம் வகைக்குறிக்கப்படும் விருத்தி யாது?

b)18 மாதங்களில் மாணவன் சேமிக்கும் பணம் எவ்வளவு?

a)..................

b)..................

**9**

$lga+lgb=3$ எனின் $lg(ab)^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

a)..................

b)..................

**10**

a) 11025 ஐ முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எடுத்துரைக்க.

b) இலிருந்து $\sqrt{11025}$ இன் பெறுமானத்தைக் காண்க.

a)..................

b)..................

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# நோத்முதல் கோபல்லவா வரை 139



## டொனமூர் யாப்புத் திருத்தம்

டொனமூர் ஆணைக்குழுவினர் அக்காலத்தில் நிலவிய பிரதி நிதித்துவ முறைகளை நன்கு பரிசீலனை செய்தபின் கீழ்க் கண்டவாறு தமது கருத்தை ஒரு குறிப்புரையாகக் கூறினார். ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அரசாகிய உடம்பில் புற்றுநோய் போலப் பற்றிக் கொண்டு தேசத்தின் ஆற்றலை வெகுவாக உட்புறமாகத் தாக்கி வந்துவிட்டது. இதனால் சுயநலம். ஐயுறவு, பகைமை, வெகுவாக வளர்நது தேசியத் தன்மை உண்டாகாதவாறு செய்துவிட்டது. ஆகவே தான் நாங்கள் இன அடிப்படையில் பிரதி நிதித்துவம் அமைதல் ஆகாது எனக் கண்டிப் பாகக் கூறுகின்றோம்''

சர்வசன வாக்குரிமை வழங்குவதில் டொனமூர் ஆணைச் சபையில் அங்கம் வகித்த தொழிற் கட்சிப் பிரமுகரான டிரமன் சீல் அதிக ஆர்வங்காட்டினார். அவர் பேராசிரியர் பேக்மன் அவர்களோடு பிற்காலத்தில் பேசிய சந்தர்ப்பத்தில், தாம் சர்வசன வாக்குரிமைக்கு வழிகோலியமை தமது வாழ்க்கையில் தாம் பெருமைப்படக் கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக் கூறி மகிழ்ந்தாராம்.

முன்னர் பிரித்தானிய குடியேற்ற நாடுகளுள் இலங்கையே முதலில் சட்டசபையைப் பெற்றமைபோல இப்போதும் இலங்கை வாசிகளே முதலில் சர்வசன வாக்குரிமையையும் பெறுவாராயினர்.

இலங்கையர் வாக்குரிமை பெற்ற வரலாற்றை ஒருவர் விளையாட்டாக விளையாட்டு மொழியில் விகடமாகக் கூறியபோது, துள்ளிக் கால் வைத்துப் பாய்ந்தமை போல என வருணித்துள்ளார். படித்தவர்களுக்கு மாத்திரம் வாக்குரிமை வழங்கிய 1910 ஆம் ஆண்டிலே துள்ளி, வாக்குரிமை வழங்கல் சிறிது விசாலித்த 1920 ஆம் ஆண்டிலேயும் 1924 ஆம் ஆண்டிலேயும் கால்வைத்து, சர்வசன வாக்குரிமை வழங்கிய 1931 ஆம் ஆண்டிலே பாய்ந்தமையை அவர் துள்ளிக் கால் வைத்துப் பாய்ந்தமை என்றார்.

டொனமூர் குழுவினர் முதலில் 21 வயது வந்த ஆண்களுக்கும் 30 வயதுப் பெண்களுக்குமே வாக்குரிமை வழங்க வழி செய்தனர். ஆனால் சட்டசபையில் டொனமூர் திருத்தம் விவாதிக்கப்பட்டபோது ஆண்களைப் போலவே பெண்களுக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்கல் வேண்டுமென்று

**மீன் பார்வை**

*A.F.* பிறீமன் அவர்கள் பிரேரித்து நிறைவேற்றினார்.

அதனைக் குடியேற்ற மந்திரி யாராய சிட்னிவெப் என்ற பஸ்வீல்ட் பிரபு அனுமதித்து அனைவருக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்க ஒழுங்கு செய்தார்.

டொனமூர்த் திருத்த சபையினர் சர்வசன வாக்குரிமை வழங்கியதற்குப் பல காரணங்கள் உண்டு.சமூக கைத்தொழிற் சட்டவாக்கங்கள் துரிதமாக நடைபெறும் என்றும், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மருந்துச் சாலைகள், வீதிகள் ஆகிய பொதுசன உபயோக வசதிகள் நாட்டின் நாலு பக்கங்களிலும் நல்ல முறையில் ஸ்தாபிக்க ஏதுவாகும் என்றும் கருதினர். பொறுப்பாட்சி வழங்கிச் சுயராட்சியத்துக்கு வழிகோலுகின்ற நேரத்திலே ஒரு சிலருக்கு மாத்திரம் வாக்குரிமையை வழங்கினால் கைக்கூலி பெறுதல் முதலிய ஊழல்கள் அதிகரிக்கலாமாகையால், எல்லோருக்கும் வாக்குரிமை வழங்குவதே நல்ல முறை எனவும் அவர்கள் கருதினர். இன்னும் எழுத்து வாசிப்பைக் கொண்டு ஒருவருடைய அரசியலறிவை மட்டிட முடியாததாகையால் அரசியல் அலுவல்கள் நன்கு தெரிந்த பேர்வழிகள் கூட விவசாயத்திலும் தொழில்துறைகளிலும் ஈடுபட்டிருக்கலாமாதலால் அவர்களைப் புறக்கணிப்பது தருமமாகாது என ஆணையாளர் கருதினர். அன்றி எல்லோருக்கும் வாக்குரிமையை வழங்கிவிட்டால் எல்லோரும் நாட்டின் பொது நன்மைக்குத் தம் உபகரிப்பைச் செய்வார்கள்.

இன்னும் சாதாரண விசாசாயி ஒருவனின் வருமானத்தை மட்டிடுதலும் இயலாத செயலாகும். அத்தகைய விவசாயிகளே நாட்டின் பெரும்பான்மை மக்களாதலால் அவர்களைப் புறக்கணிப்பதும் முறையல்லவென்பதால் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்குவதற்கு ஆணையாளர் முடிவுசெய்தனர்.

டொனமூர்த்திருத்தத்தின் வண்ணம் சர்வசன வாக்குரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டது. என்றாலும் வாக்காளருக்குரிய யோக்கியாம்சங்கள் வரையறை செய்யப்பட்டிருந்தன. வாக்காளராவோர்:

1.பிரித்தானிய குடியாகவும்,

2.அவர் 21 வயதுக்கு மேற்பட்டவராயும்,

3.அவர் அவ் வருடத்தின் ஆவணி மாதத்துக்கு முன் உள்ள 18 மாத காலத்தில் ஆறு மாதகாலமாவது இலங்கையில் வாழ்ந்தவராயும்,

4.அவர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட கடூழியச் சிறை பெறாதவராயும்,

5.சித்தப்பிரேமை, கலக்கம் இல்லாதவராயும்,

6. கைக்கூலி முதலியவற்றுக்காகக் குற்றப்படாதவராயும் இருத்தல் வேண்டும் என்பது நியதியாயிற்று.

முன்னர் 1924 ஆம் ஆண்டின் சட்டசபைத் தேர்வின்போது இருந்த தகைமைகள் வாக்காளரை வெகுவாகக் கட்டுப்படுத்தியதால் இலங்கையில் 4% மக்களுக்கே வாத்குரிமை இருந்தது. அதன் பிரகாரம் இலங்கையில் 2இலட்சத்து 5ஆயிரம் வாக்காளர் பதியப்பட்டிருந்தனர்.

ஆனால் 1931 ஆம் ஆண்டின் தேர்தலுக்கு 15இலட்சத்து 77 ஆயிரத்து 850 வாக்காளர் பதியப்பட்டிருந்தனர்.

இவ் வாக்காளர் இலங்கையில் உள்ள 50 தேர்தற் தொகுதிகளில் பிரதிநிதிகளைத் தெரியக் கூடியவராயிருந்தனர். அவர்கள் மாகாணந் தோறும் தெரிந்தனுப்பக் கூடிய பிரதிநிதிகள் தொகை வருமாறு,

| | |
|---|---|
| 1.மேல்மாகாணம் | -14 |
| 2.மத்திய மாகாணம் | -8 |
| 3.தென்மாகாணம் | -7 |
| 4.வடமாகாணம் | -4 |
| 5.கீழ்மாகாணம் | -2 |
| 6.வடமேல் மாகாணம் | -6 |
| 7.வடமத்தியமாகாணம் | -1 |
| 8.ஊவா மாகாணம் | -3 |
| 9.சப்பிரகமுவ மாகாணம் | -5 |

க.சி.குலரத்தினம்

முன்னர் 1923 ஆம் ஆண்டுத் திருத்தத்தின்போது வேட்பாளர் வயது 25 என்றும் , அவர் ஆங்கிலம் வல்லவராய் இருத்தல் வேண்டும் என்றும் அவரிடம் அசையா ஆதனம் இருத்தல்வேண்டும் என்றும் இருந்த நிபந்தனைகள் பல 1931 ஆம் ஆண்டுத் தேர்தலுக்குத் தளர்த்தப்பட்டன.

வேட்பாளர் 21 வயதுக்கு மேற்பட்டவராய் , 1000ரூபா பிணைப்ப ணங் கட்டக் கூடியவராயிருத்தல் வேண்டும் என்பதும் அவர்கள் பெண்பாலராயும் இருக்கலாம் என்பதும் நியதியாயிற்று.

எனவே முன்னர் சட்டசபையியினைப் போலன்றி அரசாங்க சபையினைப் பெண்களும் அலங்கரிப்பாராயினர்.

(தொடரும்)

# பூமிக்கு பெரும் சவாலாக அமையும் ஓசோன் வெறிதாக்கல்

**1**

புவியை சூழ ஒரு பாதுகாப்பு கவசமாக ஓசோன்படை காணப்படுகின்றது. இது புவி மேற் பரப்பிலிருந்து சுமார் 15 $km$ உயரத்தில் மெல்லிய கூரையாகக் காணப்பட்டு புவி யைப் பாதுகாக்கின்றது.

இவ்வோசோன் படையானது சூரிய கதிர்ப்பினால் புவியை வந்தடையும் புறவூதா கதிர்களை *(Uv Rays)* தடுத்து வடிகட்டி அதனால் ஏற்படக்கூடிய பேராபத்துக்களைத் தவிர்க்கின்றது.

புறவூதாக்கதிர்கள் வளிப்படையினைத் தாக்கும்போது , ஓட்சிசன் மூலக் கூறுகள் பிரிகையடைந்து ஒட்சிசன் அணுக்களை ஆக்குகின்றன. இவ் ஒட்சிசன் அணுக்கள் விரைவாக மேலதிக ஓட்சிசன் $(O_2)$ மூலக் கூறுகள் இணைந்து ஓசோனை உருவாக்கும்.


இது பெரியளவில் உற்பத்தியாகி ஓசோன் $(O_3)$ படிவாக புவியை சூழக் காணப்படுகின்றது. இவ்வோசோன் புறவூதாக் கதிர்களை உறிஞ்சுவதில் சக்தி வாய்ந்தது. வளிமண்டலத்தில் இவ்வோசோன் படை இல்லாவிட்டால் புவியில் எந்த உயிரினமும் உயிர்வாழ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

1970 ஆம் ஆண்டு அந்தாட்டிக்காவிற்கு மேலேயுள்ள வளிமண்டலத்தை ஆராய்ச்சி செய்த பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் அந்தாட்டிக்காவிற்கு மேலே உள்ள ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளதை அவதானித்தார்கள்.

1985 இல் மீண்டும் ஆராய்ச்சி செய்தபோது அந்தாட்டிக்காவின் வானில் ஏறக்குறைய அரைவாசி ஓசோன் படை அழிந்துவிட்டதாக அறியப்பட்டது.

அவ்வாறே ஆட்டிக்கிற்கு மேலான வானத்திலும் 3% ஓசோன் இழப்பு ஏற்பட்டுள்ளதென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கடந்த 40 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரின் மேலான ஓசோன் படையிலும் 8% இழப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டு போல் கிறிஸ்ரின் என்ற விஞ்ஞானி அசேதன உரப்பாவனை, வாகனங்களின் எரிபொருள் தகனமடைதல், றொக்கெட்டுக்கள், விண்கலங்கள் போன்றவற்றினால் வெளியேற்றப்படும் நைதரசன் ஒட்சைட்டுக்கள் ஓசோனை அழிவடைய செய்யக்கூடியவை என எச்சரித்திருந்தார்.




1974 இல் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த மாரியோ மொலினா, ஷெர்ஷட் ரோலான் என்ற இரு விஞ்ஞானிகளும் புவியிலிருந்து வெளியேற்றப்படும் குளோரோபுளோரோ காபன்கள்*(CFCs)* ஓசோன பாதுகாப்படையை அழிக்கின்றது என்பதைக் கண்டறிந்தார்கள் .

புவியிலிருந்து வெளியேற்றப்படும் இக் குளோரோ புளோரோ காபன்கள், சூரிய கதிர்ப்பினால் புவியை வந்தடையும் புறவூதா கதிர்களை உறிஞ்சி,குளோரின் அணுக்களாகவும் புரோமின் அணுக்களாகவும் பிரிகின்றன. இந்த குளோரின் அணுக்கள் ஓசோனுடன் $(O_3)$ தாக்கமடைந்து ஒட்சிசனை $(O_2)$ உருவாக்குகின்றது.

இதுவே ஓசோன் அழிவு/வெறிதாக்கல் எனப்படும். *CFC* மட்டுமன்றி, வாகன எரிபொருள் தகனமடைவதால் வெளியேற்றப்படும் நைதரசன் ஒட்சைட்டும் ஓசோன் வெறிதாக்கலில் இன்று பாரிய பங்கு வகிக்கின்றது.

இவ்வோசோன் படை அழிவு காரணமாக சூரிய கதிர்ப்பினால் வீசலாகும் புறவூதாக் கதிர்கள் *(Uv rays)* வடிகட்டப்படாது நேரடியாக புவியை வந்தடைகின்றன. இதனால் தோல் புற்றுநோய்கள், விழிவெண்படல நோய்கள்,விழித்திரைக் கலங்கள் பாதிப்படைதல், கற்றாக்ட்,நீர்ப்பீடனத் தொகுதி பாதிக்கப்படல்,தாவர விலங்குகளின் இன விருத்திக் கலங்கள் பாதிப்படைதல், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைந்து கொண்டே செல்லுதல், கடல் உணவு சங்கிலி முற்றாக பாதிப்படைதல், காட்டு வளம் குன்றுதல், பயிர் விளைச்சல் பாதிக்கப்படல் போன்ற மிக மோசமான விளைவுகள் ஏற்படும்.

திருமதி கோமளரஞ்சிதம் கந்தவேள்
இணுவில்

அதுமட்டுமன்றி வெப்பநிலை உயர்வடையும்.இதனால் வரட்சி; நிலத்தடி நீர் வற்றிச் செல்லுதல்,துருவ பனிப்பாறைகள் உருகுதல், இதனால் கடல் மட்டம் உயர்வடைதல், கடல் பெருக்கு ஏற்படல்,சிறிய தீவுகள் மிக விரைவாக நீரில் மூழ்குதல் என விபரீதமான விளைவுகளை சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான்.

(தொடரும்)

# பாகிஸ்தானில் நிலநடுக்கத்தில் 80பேர் பலி ; 500 பேர் காயம்

(இஸ்லாமபாத் )

பாகிஸ்தானில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நில நடுக்கத்தில் 80 பேர் பலியானார்கள். ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமானது.

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பலூசிஸ்தான் மாகாணத்தின் சில பகுதிகளில் நேற்று திடீரென்று பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. குவெட்டா நகருக்கு வட கிழக்கே உள்ள பகுதிகளை இந்த நில நடுக்கம் தாக்கியது. ஆப்கானிஸ்தான் அருகே இந்தப் பகுதிகள் அமைந்துள்ளன.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 4.40 மணிக்கு இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.2 புள்ளியாக இது பதிவானது.

10 வினாடிகள் நீடித்த இந்த நில நடுக்கத்தில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. நில நடுக்கத்துக்கு பயந்து பொது மக்கள் வீடுகளை விட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். அங்குள்ள சியாரத், பிஷின் நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மட்டும் இதுவரை 17 பேர் பலியானதாக அந்த நகர மேயர் கான் தெரிவித்துள் ளார்.



பாகிஸ்தானில் கடுமையான நிலநடுக்கம் தாக்கியுள்ளது. பீதியில் உறைந்த மக்கள் விடிய விடிய வீதியில் இருந்தனர்.

500க் கும் மேற்பட்டவர்கள்காயம்அடைந்து பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை மொத்தம் 80 பேர் பலியானதாகதகவல்தெரிவிக் கப்பட்டுள்ளது.

சாவு எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கிய உடல் களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வரு கிறது.

கடந்த 1935 ஆம் ஆண்டு இதே குவெட்டா பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 30 ஆயிரம் பேர் பலியானார்கள். இதேபோல் கடந்த 2001 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் வட பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் பேரழிவை ஏற்படுத்தியது. அப்போது 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். (ஓ-6)

# ஆர்டிக் கடல் பிராந்திய பனிப்பாறை என்றுமில்லாதவாறு உருகியுள்ளது

## -பிரித்தானிய ஆய்வாளர் தெரிவிப்பு


ஆர்டிக் கடல் பிராந்திய பனிப்பாறையானது குளிர்காலத்தில் என்றுமில்லாதவாறு உருகியுள்ளதாகவும் சில பகுதிகளில் 49 சென்ரிமீற்றர் (1.6அடி) வரை உருகியுள்ளதாகவும் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

செய்மதிப் படங்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் ஊடாகவே இந்த உண்மை கண்டறியப்பட்டதாக லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மேற்படி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆர்டிக் பிராந்திய பனிப்பாறையில் ஏற்பட்ட இழப்புத் தொடர்பான முதலாவது முடிவான ஆதார பெறுபேறுகளைத் தாம் பெற்றுள்ளதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு முன்னைய 5 பனிக் காலங்களிலும் ஆர்டிக் கடல் பிராந்திய பனியின் தடிப்பானது உறுதியானதாக இருந்ததாகவும் ஆனால் கடந்த ஆண்டு குளிர்காலத்தின் பின் பனியின் தடிப்பானது கணிசமான அளவு வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் ''என்விசட்'' செய்மதியிலுள்ள ஆராய்சி உபகரணம் மூலமே மேற்படி பனியின் தடிப்பிலான வீழ்ச்சி தொடர்பான தரவுகள் பெறப்பட்டன. (ஓ)



ஜப்பான் வந்துள்ள பிரிட்டன் இளவரசர் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமீலியாவுக்கு, அந்நாட்டு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# தென்கொரியா தனது எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ந்தால் அதன் மீது தாக்குதல் நடத்துவோம்

## வடகொரியா எச்சரிக்கை

(பியாங்ஜியாங்)

வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே கடந்த சில நாட்களாக மோதல் அதிகரித்து வருகிறது.

தென்கொரியாவில் இருந்து சிலர் வட கொரியாவுக்குள் புகுந்து அந்த நாட்டுக்கு எதிராக துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருவதாக வடகொரியா அரசு புகார் கூறி வருகிறது.

வட கொரியா மக்களையும் அரசுக்கு எதிராக துண்டுபிரசுரங்கள் மூலம் தூண்டிவிடுவதாக வட கொரியா குற்றம்சாட்டி வருகிறது.

இதை உடனடியாக நிறுத்தாவிட்டால் தென்கொரியா மீது இராணுவத் தாக்குதல் நடத்துவோம் என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் கைப்பாவையாக தென் கொரியா செயல்படுவதாகவும் வட கொரியாவின் இந்த மிரட்டல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவும் தென்கொரியாவும் கூட்டு இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. (ஓ)

## உலக தரிசனம்

# அமெரிக்காவில் ஒபாமா பதவியேற்றதும் தாக்குல் நடத்த அல்கொய்தா திட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஒபாமாவை கொலை செய்ய திட்டமிட்ட வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டு ஒபாமாவை கொலை செய்யும் சதி முறியடிக்கப்பட்டு விட்டாலும் தேர்தலின் போது அங்கு இனக் கலவரம் ஏற்படும் அபாயம் இருப்பதாக அதிகாரிகள் கருதுகிறார்கள். கறுப்பு - வெள்ளை இனத்தவர்கள் இடையே இனக் கலவரத்தை ஏற்படுத்தி தேர்தலை சீர் குலைக்க அல்கொய்தா இயக்கத்தினர் திட்டமிட்டுள்ளனர். அமெரிக்காவிலேயே அல் கொய்தா ஆதரவாளர் பலர் செயல்பட்டு வருகிறார்கள்.

அதிபர் தேர்தலில் ஒபாமாவே வெற்றி பெறுவார் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. தேர்தல் முடிந்ததும் புதிய அதிபர் பெப்ரவரி மாதம் பதவி ஏற்க இருக்கிறார். புதிய அதிபர் பதவி ஏற்றதும் அமெரிக்காவில் உலக வர்த்தக மைய கட்டடத்தின் மீது 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் போல் மீண்டும் தாக்குதல் நடத்தவும் அல்கொய்தா திட்டமிட்டுள்ளது.

முன்பு பில்கிளிண்டன் 1993 இல் அதிபராக பதவி ஏற்றபோது பெப்ரவ்ரி மாதம் நியூயோர் வர்த்தக மையம் மீது தாக்குதல் நடந்தது.

அந்த முதல் தாக்குதல் போல் மீண்டும் தாக்குதல் நடத்த அல்கொய்தா இயக்கத்தினர் தயாராகி வருகிறார்கள். (ஓ)

# 30 வருடங்கள் தொடர்ந்து பதவியிலிருந்த மாலைதீவு ஜனாதிபதி பதவியிழந்தார்

ஆசியாவில் நீண்ட காலம் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் என்ற பெருமையைப் பெற்ற மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூம் 30 வருடங்களின்பின்னர் ஜனாதிபதி பதவியை இழந்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்களிப்பு நேற்று முன்தினம் நடை பெற்றிருந்தது.


அப்துல் கயூம்மை எதிர்த்து போட்டியிட்டிருந்த அனி என அனைவராலும் அறியப்பட்ட மொகமட் அசீட் 55 வீத வாக்குகளைப் பெற்றார். ஏற்கனவே 50 வீதமான வாக்குகளைப் பெற்றிருந்த அவர் இரண்டாம் கட்ட வாக்களிப்பின் முடிவுகள் எண்ண ஆரம்பித்து சிறிது நேரங்களில் 55 வீத பெரும்பான்மையை பெற்றுவிட்டார்.

இதனைத் தொடர்ந்து 1978ஆம் ஆண்டு முதல் 30 வருடங்கள் மாலைதீவு ஜனாதிபதியாகவிருந்த அப்துல்கயூம் பதவியிழந்துள்ளார்.

அரசியல் மாற்றங்கள் இடம்பெற்ற தெற்காசிய நாடுகளான நேபாளம், பூட்டான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வரிசையில் தற்பொழுது மாலைதீவுஇடம் பெற்றுள்ளது.

பல்வேறு கட்சிகள் போட்டியிட்ட முதலாவது தேர்தல் இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ)

## தங்க படுக்கை



(ஷாங்காய்)


தங்கத்தின் விலை, வானளாவ உயர்ந்து நிற்கும் வேளையில் தங்கப் படுக்கையை உருவாக்கி சாதனை படைத்திருக்கிறது இத்தாலிய நிறுவனம் ஒன்று.

சீனாவின் ஷாங்காய் நகரில், கோடீஸ்வரர்களுக்கான ஆடம்பரப் பொருட்கள் கண்காட்சி நடைபெறுகிறது. இதில் சொகுசு கார்கள் முதல் விலை உயர்ந்த பல்வேறு ஆடம்பரப் பொருட்கள் இடம்பெறுகின்றன. இந்த தங்கப் படுக்கையும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. 22 கரட் தங்க இழைகளால் உருவாக்கப்பட்டுள்ள இதன் விலை ரூ.11 இலட்சத்து 52 ஆயிரம். தலையணையின் விலை ரூ.48 ஆயிரம். இத்தாலியைச் சேர்ந்த மேக்னிபிளெக்ஸ் நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது.

### ஈழத்தமிழர் பிரச்சினைக்காக

# தனியாகப் போராட்டம் நடத்த நடிகர் ரஜினி தீர்மானம்!

## அவருக்கு நெருக்கமானவர்கள் தகவல்



தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளில்தன்னுடைய கருத்தைதனியாகவெளிப்படுத்துவது நடிகர் ரஜினிகாந்தின் ஸ்டைல் தற்போது தமிழகம் மட்டுமல்லாது, மத்திய அரசையும் சேர்த்து உலுக்கிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் தனி ஆவர்த்தனம் செய்ய ரஜுனி தயாராகி விட்டார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அமுல்படுத்தாத கர்நாடகாவைக் கண்டித்து, தனியாக உண்ணா விரதம். ஓகேனக்கல் பிரச்சினையில் பேசும் போது தண்ணீர் கொடுக்காதவர்களை உதைக்க வேண்டாமா எனப் பேசி என்றைக்கும் நியாயத்தின் பக்கம் தான் இருப்பேன் என்பதை நிரூபித்தார்.

தற்போது குசேலன் படத்தின் தோல்வி கட்சி ஆரம்பிக்க ரசிகர்கள் வற்புறுத்தல் அரசியலுக்கு வரவில்லை என அறிக்கை இதற்கிடையே கோடிகளைக் கொட்டி எடுக்கப்படும் எந்திரன் படத்தயாரிப்பு என ரஜினியைச் சுற்றி ஒரு சிக்கலான நிலை உள்ளது. அடுத்ததாக இலங்கைப் பிரச்சினையிலும் தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார் ரஜினிகாந்த். ஆனால் நடிகர் சங்கம் நடத்தும் போராட்டத்தில் அவர் பங்கேற்க மாட்டார் என அதிர வைக்கின்றன ரஜினியின் தகவல் அறிந்த நிர்வாகிகள் சிலர்.

இது தொடர்பாக அவர்கள் கூறியதாவது, கோடிகளைக் கொட்டி எடுக்கப்படும் எந்திரன் படத்திற்கான வியாபாரம் குறித்தும் ரஜினிக்கு கவலை ஏற்பட்டுள்ளது இவ்வளவு பிரச்சினைக்கம் ஒரே தீர்வு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தனியாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது தான் என்று அவர் முடிவெடுத்துவிட்டார். அதன் மூலம், குசேலன் படம் மூலம் சரிந்த தனது இமேஜை தூக்கி நிறுத்துவது, ரசிகர்களையும் உண்ணாவிரத மேடையில் சந்திப்பது என்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் திட்டத்தை தீட்டியுள்ளார்.

இவ்வாறு அந்த நிர்வாகிகள் கூறுகின்றனர். இலங்கைத் தமிழருக்காக உண்ணா விரதப் போராட்டம் நடத்துவது குறித்து ரஜினி யோசித்துக் கொண்டிருப்பதும் உண்மை தான். ஆனால் நடிகர் சங்கம் நடத்தும் போராட் டத்தில் அவர் கலந்துகொள்வாரா, இல்லையா என்பது அவர் மட்டுமே அறிந்த ரகசியம்.

எல்லா பிரச்சினைக்கும் அவர் தீர்வு வைத்துள்ளார். எப்போது எப்படி முடிவெடுப்பார் என்று ரஜினிக்கே தெரியாது. ஆனால், அதை கண்டிப்பாக செயல்படுத்துவார் என ரஜினியின் ஸ்டைலிலே பதில் சொல்கின்றனர் அவருக்கு நெருக்கமான தரப்பினர். (5)

## 267 ஆயிரம் கி.மீ. உயரத்தில் சந்திராயன் -1 விண்கலம்

(சென்னை)

இந்தியா சந்திரனுக்கு அனுப்பியுள்ள சந்திராயன் -1 விண்கலம் நேற்று பூமியிலிருந்து 2 இலட்சத்து 67 ஆயிரம் கிலோ மீற்றர் சுற்று வட்ட பாதைக்கு நிறுத்தப்பட்டது.

முதன் முதலாக இந்தியா சந்திரனுக்கு கடந்த 22 ஆம் திகதி பி. எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் சந்திராயன் - 1 விண்கலத்தை அனுப்பியது.

பின்னர் பி.எஸ். எல். வி. ரொக்கெட்டில் இருந்து இந்த விண்கலம் புவிவட்ட பாதையில் செலுத்தப்பட்டது. நிலவை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு கட்டமாக சந்திராயனின் புவிவட்ட பாதை உயர்த்தப்பட்டுவருகிறது.

கடந்த 26 ஆம் திகதி ஒரு இலட்சத்து 65 ஆயிரம் கி.மீ. வட்ட பாதைக்கு உயர்த்தப்பட்டது. அடுத்த கட்டமாக நேற்று 2 இலட்சத்து 67 ஆயிரம் கி.மீ. வட்ட பாதைக்கு சந்திராயன் உயர்த்தப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி இந்த விண்கலம் 3 இலட்சத்து 84 ஆயிரம் கி.மீ. வட்டபாதையில் உயர்த்தப்படும். அதன் பின்னர் விண்கலம் சந்திரனை சுற்றிய வட்ட பாதைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அதன் மோட்டார் இயக்கப்பட்டு சந்திரனின் மேற்பரப்பிற்கு கொண்டு செல்லப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

### பாரதச் செய்திகள்

# இந்திய அரசுக்கும் தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் இலங்கையின் வாக்குறுதிகளில் நம்பிக்கை தொடர்வது ஏன்?

## தினமணி நாளேடு கேள்வி

(சென்னை)

இந்திய அரசுக்கும் தமிழ் நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதிக்கும் இலங்கை அரசின் வாக்குறுதிகளில் நம்பிக்கை தொடர்வது எதனால் என்பது புரியவில்லை. என்று தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தினமணி நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் அந்த நாளேட்டில் வெளிவந்துள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.



ஜெயவர்த்தன காலத்திலிருந்து கூறப்படும் மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தருவோம், அப்பாவிப் பொது மக்களை எக் காரணம் கொண்டும் தாக்கமாட்டோம் பாதிக்கப்பட்டவர்களுக்குதங்கு தடையின்றி நிவாரண உதவிகள் வழங்கப்படும் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் போன்றவற்றைக் கேட்டுக் கேட்டு நமக்கெல்லாம் சலித்துவிட்டாலும் இந்திய அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் இலங்கை அரசின் வாக்குறுதிகளில் நம்பிக்கை தொடர்வது எதனால் என்பது புரியவில்லை.

மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற நம்பிக்கை வீண்போகவில்லை என்றும் மத்திய அரசின் நடவடிக்கைகள்தனக்குத் திருப்தி அளிப்பதாகவும் முதல்வர் கூறி இருப்பது விசித்திரமாக இருக்கிறது. மத்திய அரசு அப்படி என்னநடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை பசில்ராஜபக்ஷவிடம் பேச்சு வாாத்தை நடத்தி பல முறை தந்த உதட்டளவு உத்தரவாதத்தை மறுபடியும் பெற்றிருப்பது முதல்வரைத் திருப்திப்படுத்தி இருப்பது ஆச்சரியம்தான். அல்லற்படும் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பும் பாதிக்கப்பட்டால் நிவாரணமும் தரவேண்டிய கடமை இலங்கை அரசுக்கு உண்டு. அதை அவர்கள் செய்யத் தவறி இருப்பதில் இருந்தே எந்த அளவுக்கு நிலை மோசமாக இருக்கின்றது என்று நாம் புரிந்துகொள்ளலாம். அவதிப்படும் இலங்கை குடிமக்களான தமிழர்களுக்கு தங்களது செலவில் நிவாரணம் கூட தயா ராக இல்லாமல் அதை இந்தியாவில் இருந்து கேட்டுப்பெறுகிறது அந்த அரசுஎன்றால் நாம் ஏமாளிகளாக இருக்கிறோம் என்று தானே பொருள்?

**இலங்கைப் பிரச்சினையை பற்றி நன்றாக தெரிந்த தமிழக அரசியல்வாதி ஒருவரை உள்ளடக்கிய குழுவால் மட்டும் தான்இலங்கையின் சமாதானத்திற்கு வழிகோல முடியும்**

தன்மான உணர்வு, சுய மரியாதை என்று ஊருக்கு உபநியாசம் செய்யும்முதல்வர் தன்மானமும் சுய மரியாதையும் இல்லாமல் தனது நாட்டுக்குடி மக்களுக்கு அன்னிய நாட்டின் நிவாரண்ம் கேட்கும் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்காமல் இங்கே நிவாரண நிதி திரட்ட முற்பட்டிருக்கிறார். முன்பு பழ.நெடுமாறன் திரட்டி வைத்திருந்த மருந்துகள் மற்றும் நிவாரணப் பொருட்களை வீணடித்த போது இல்லாத உத்வேகம் இப்போது திடீரென முதல்வருக்கு வந்திருக்கிறதே அது ஏன்? புரியவில்லை.

விடுதலைப்புலிகள் அப்பாவிப் பொது மக்களை மனிதக் கவசங்களாகப் பயன்படுத்துவதால் அவர்கள் சில வேளைகளில் பாதிப்புக்கு உள்ளாக நேர்கிறது. என்பது இலங்கை அரசின் வாதம். நடத்துவது என்னவோ விமானக் குண்டு வீச்சு அதில் எங்கிருந்து வருகிறது மனிதக் கவசம் என்று கேள்வி கேட்கக் கூடவா முதல்வருக்கும் மத்திய அரசுக்கும் தெரியாமல் போய் விட்டது.

கிளிநொச்சியில் இருக்கும் ஒரே மருத்துவமனையும்குண்டு வீச்சுக்கு இரையாகி விட்ட நிலையில் மருத்துவ வசதி இல்லாமல் அங்சே அப்பாவிகள் செத்து மடிகிறார்கள். போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு தான் பேச்சு வார்த்தை என்றல்லவா முதல்வர் இந்திய அரசை வற்புறுத்தி இருக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வு என்று பேசுபவர்கள் முதலில் அதிகாரிகள் மூலம் இந்தப் பிரச்சினையை அணுகுவதை நிறுத்த வேண்டும் இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நன்றாகத் தெரிந்த தமிழக அரசியல் வாதி ஒருவரை உள்ளடக்கிய இந்தியக் குழுவால் மட்டுந்தான் இலங்கையின் சமாதானத்துக்குவழி கோலமுடியுமே தவிர அதிகாரிகளால் முடியாது என்று எடுத்துச் சொல்ல முதல்வர் ஏன் தயங்குகிறார்?

மத்திய அரசை வேதனைக்கு உள்ளாக்கும் வகையில் சிக்கலை உருவாக்க மாட்டோம் என்று முதல்வர் கருணாநிதியும் இலங்கை உள் நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம். என்று மத்திய அரசும் நிலைப்பாடு எடுத்திருக்கும் போது அங்கே அன்றாடம் செத்து மடியும் அப்பாவித் தமிழர்களுக்கு எப்படி நிவாரணமும் நியாயமும் கிடைக்கும்? நாம் அனுப்பும் நிதியும் நிவாரணமும் இலங்கைஅரசால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போய்ச் சேரும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நாற்பதாண்டு பிரச்சினையை நான்கு நாட்களில் தீர்க்க முடியாது என்கிற முதல்வரின் கருத்து சிரிப்பை வரவழைக்கிறது. அனைத்து கட்சிக் கூட்டத்தின் போதும்நாடாளுமன்ற உறுப்பினர்கள்பதவிவிலகலின் போதும் மனிதச் சங்கிலிநடத்திய போதும்தெரியாத இந்தஉண்மை மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் வந்தவுடன் தான் முதல்வருக்குத் தெரிந்ததா என்ன? அது போகட்டும் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த திமுக இந்தப் பிரச்சினைக்கு ஏன் தீர்வு காணமுயற்சிக்கவில்லை.

பாகிஸ்தானின்முன்னாள்உளவுத்துறை தலைவர் கொழும்பில் பாகிஸ்தான் தூது வராக அமர்ந்து ராஜபக்ச அரசுக்கு ஆலோ சனை வழங்கிவரும் நிலையில் சீனாவுடன் மிக நெருக்கமாக உறவை இலங்கை அரசு வளர்த்து கொண்டிருக்கும் வேளையில் இந்திய அரசு உதட்டளவு உத்தரவாதத்தை நம்புவது சரியான இராஜதந்திரம் ஆகாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# உண்ணா விரதப் போராட்டத்தில் விடுதலைப்புலிகள் பற்றி பேசத் தடை

## நடிகர் - நடிகைகளுக்கு அறிவுறுத்தல்

(சென்னை)

நடிகர்கள் சங்கம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது. தியாகராய நகரில் உள்ள நடிகர் சங்க அலுவலக வளாகத்தில் இந்த உண்ணாவிரதம் காலை 8மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறும் உண்ணா விரதத்தில் பங்கேற்குமாறு நடிகர்-நடிகைகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ரஜனி , கமல் , விஜய் , விக்ரம், அஜித் , சூர்யா , விஷால் மற்றும் ஜெயம் ரவி உள்ளிட்ட முன்னணி நடிகர்களுக்கு அழைப்பு விடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நயன்தாரா திரிஷா , ஸ்ரேயா , அசின் , பிரியாமணி, பாவனா, சந்தியா, நமீதா ,சினேகா போன்ற முன்னணி நடிகைகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டு கறுப்பு சின்னமும் அணிந்து உண்ணா விரதத்தில் அனைவரும் பங்கேற்கிறார்கள்.

உண்ணா விரதத்தில் விடுதலை புலிகள் பற்றி பேசக் கூடாது என்று நடிகர் நடிகைகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இயக்குநர்கள் சீமான் , அமீர் ஆகியோர் விடுதலை புலிகளுக்கு ஆதரவாக பேசியதாக தேசிய பாதுகாப்பு சட்டப்படி கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நடிகர்-நடிகைகள் உண்ணா விரதத்தையும் இரகசிய பொலிஸார் கண்காணிக்கிறார்கள். உண்ணாவிரதத்தில் பேசும் நடிகர் நடிகைகளின் பேச்சுக்களை பதிவு செய்யும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினால் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என கூறப்படுகிறது.

எனவே தான் விடுதலைப்புலிகள் பற்றி பேச வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ-6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 01 |
| 07 | 10 |
| 1940 | 2008 |



## அமரர் கிட்டிணர் தர்மரட்ணம்

*(ஓய்வு பெற்ற நிதி உதவியாளர் கரவெட்டி பிரதேச செயலகம்)*

கடந்த 01.10. 2008 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கிட்டிணர் தர்மரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (31.10.2008) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

***நன்றி நவிலல்***

எமது குடும்பத் தலைவர் நோயுற்று மந்திகை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் (8 ஆம் வாட்) சிகிச்சை பெற்றபோது சிகிச்சைக்கு உதவிய மருத்துவர் , தாதியர், சிற்றூழியர் மற்றும் ஆதரவு அளித்தோருக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

பாடசாலை வீதி,
கரணவாய்  *T.P. 077 6577375*


**குடும்பத்தினர்.**

*C/1875*

# 31.10.2008 அன்று உலக சிக்கன தினத்தை கொண்டாடும் முகமாக HNBன் சிறுவர்களுக்கான வெகுமதிகள்



**31.10.2008, 01.11.2008 ஆகிய தினங்களில் வங்கிக்கு வருகை தரும் அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில்கள் காத்திருக்கின்றன**




அன்றைய தினத்தில் சிறுவர் சேமிப்பு கணக்கில் வைப்பிலிடப் படும் பணத்திற்கும், புதிதாக ஆரம்பிக்கும் கணக்குகளிற்கும் பெறுமதி மிக்க வெகுமதிகள் வழங்கப்படும்.

**விரைந்திடுவீர் ! வென்றிடுவீர் !!**

*C/1825*

## இலங்கை மின்சார சபை

# புதிய மின்சாரக்கட்டணங்களும் அறவீடுகளும் பற்றிய அறிவித்தல்

உயர் நீதிமன்றத்தின் கட்டளைப்படி இலங்கை மின்சார சபையின் அனைத்துப் பாவனையாளர்களுக் கும் மின் சக்தி விநியோகிப்பதற்கான பின்வரும் கட்டணங்களையும் அறவீடுகளையும் 2008 நவம்பர் 1 ஆம் திகதி முதல் அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ள தாக 1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 52 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.இதன்படி அலகுக் கட்ட ணம் கணக்கிடப்படுவது 2008 மார்ச் 15இற்கு முன்னர் நிலவிய அறவீட்டு முறைமைக்கேற்ப அலகுப் பாகங் களை கருத்தில் கொண்டாகும் மின் நுகர்வாளார்கள் தொடர்பாக இதற்கு முன்னதான அறிவித்தல்களின் காட்டப்பட்டுள்ள அனைத்து இறுப்பனவுகளும் விதிப்பனவுகளும் 2008 நவம்பர் 1ஆம் திகதி முதல் இத்தால் வலுவிழக்கச் செய்யப்படுகின்றன.

| கட்டண வகை | அலகுக் கட்டணம்ரூபா | நிலையான கட்டணம் ரூ.- மாதம் | உச்சத்தேவைக் கட்டணம் ரூ-கே.வி. எ |
|---|---|---|---|
| **வீட்டுப்பாவனை- (டி 1)** | | | |
| 30 நாள்கொண்ட பட்டியலிடல் காலப்பகுதியொன்றில் | | | |
| 30 அலகு வரை நுகர்பவர்களுக்கு | 3.00 | 60.00 | |
| 31-60 அலகுவரை நுகர்பவர்களுக்கு | 4.70 | 90.00 | |
| 61- 90 அலகுவரை நுகர்பவர்களுக்கு | 7.50 | 120.00 | |
| 91-180அலகுவரை நுகர்பவர்களுக்கு | 16.00 | 180.00 | |
| 181-600அலகுவரை நுகர்பவர்களுக்கு | 25.00 | 240.00 | |
| 600 அலகுகளுக்கு மேல் நுகர்பவர்களுக்கு | 30.00 | 240.00 | |
| **சமயத்தளங்களுக்கு (ஆர் 1)** | | | |
| 30 நாட்கள் கொண்ட பட்டியலிடல் காலப்பகுதியொன்றில் | | | |
| 30 அலகுகள்வரை நுகர்பவர்களுக்கு | 2. 50 | 60.00 | |
| 31-90 அலகுகள்வரை நுகர்பவர்களுக்கு | 3.70 | 90.00 | |
| 91-120 அலகுகள்வரை நுகர்பவர்களுக்கு | 9.00 | 180.00 | |
| 121-180 அலகுகள்வரை நுகர்பவர்களுக்கு | 10.00 | 180.00 | |
| 180 அலகுகளுக்கு மேல் நுகர்பவர்களுக்கு | 12.50 | 240.00 | |
| **பொது நோக்கங்களுக்கு** | | | |
| ஜி .பி 1 | 15.00 | 240.00 | |
| ஜி.பி 2 | 13.80 | 3000.00 | 750.00 |
| ஜி.பி 3. | 13.60 | 3000.00 | 675.00 |
| **கைத்தொழில்** | | | |
| ஐ.1 | 10.50 | 240.00 | |
| ஐ.2 | 9.30 | 3000.00 | 675.00 |
| ஐ.3 | 9.10 | 3000.00 | 650.00 |
| நாளொன்றின் விரும்பும் நேரக்கட்டணம் (2 பாகம்) | | | |
| ஐ-2 *T.D*உச்ச(18.30மணி 21.30 மணிவரை) | 24.60 | | |
| உச்ச நேரமில்லாத நேரங்களில் | 8.40 | 3000.00 | 650.00 |
| ஐ-3*T.D* உச்ச நேரம் (18.30 -21.30 மணிவரை) | 23.00 | 3000.00 | 650.00 |
| உச்ச நேரமில்லாத நேரங்களில் | 8.00 | | |
| **ஹோட்டல் கட்டணம்** | | | |
| எச் - 1 (ஜிபி) | 15.00 | 240.00 | |
| எச் - 2(ஜிபி) | 13.80 | 3000.00 | 750.00 |
| எச் - 2(ஐ) | 9.30 | 3000.00 | 675.00 |
| எச் - 3(ஐ) | 9.10 | 3000.00 | 650.00 |
| நாளொன்றின் விரும்பும் நேரக்கட்டணம் (2 பாகங்கள்) | | | |
| எச் - 2 (ஐ -*T.D* உச்சநேரம் 18.30மணி 21.30 வரை | 24.60 | 3000.00 | 650.00 |
| உச்சநேரமில்லாத நேரங்களில் | 8.40.00 | | |
| எச் - 3(ஐ - *T.D* உச்சசேரம் 18.30 மணி 21.30 வரை | 23.00 | 3000.00 | 650.00 |
| உச்ச நேரமில்லாத நேரங்களில் | 8.00 | | |
| நாளொன்றின் விரும்பும் நேரக்கட்டணம் (3 பாகம்) | | | |
| ஐ - 2*T.D*3 உச்ச நேரம் 18.30 - 22.30) | 23.00 | 3000.00 | 650.00 |
| நாள் (04.30 - 18.30 வரை) | 7.30 | | |
| மற்றைய நேரங்கள் | 5.30 | | |
| ஐ. -3*T.D*உச்ச நேரம் (18.30 - 22.30) | 21.00 | 3000.00 | 650.00 |
| நாள் (04.30 முதல் 18.30 வரை) | 6.90 | | |
| மற்றைய நேரங்கள் | 5.00 | | |
| **ஹோட்டல் கட்டணம்** | | | |
| எச். 2 (1 *T.D*) உச்ச நேரம் (18.30 - 22.30 | 23.00 | 3000.00 | 650.00 |
| நாள் (04.30 18.30) | 7.30 | | |
| மற்றைய நேரங்கள் | 5.30 | | |
| எச் 3 (1-*T.D*) உச்ச நேரம் (18.30 - 22.30) | 21.00 | 3000.00 | 650.00 |
| நாள் (04.30 முதல் 18.30 வரை) | 6.90 | | |
| மற்றைய நேரங்கள் | 5.00 | | |

பெற்றோலிய எரிபொருள் பாவிக்கப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுவதனால் எரிபொருள் தொடர்பாக ஏற்படும் செலவீனத்தின் ஒரு பகுதியையேனும் ஈடுசெய்யும் பொருட்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள பாவனையாளர்களைத் தவிர்ந்த அனைத்து பாவனையாளர்களிடமிருந்தும் நுகரும் அலகுகளின் தொகைக்கேற்ப மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக 30% எரி பொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்படும்.

1. 30 நாட்கள் கொண்ட பட்டில் காலப்பகுதி ஒன்றில் 90 அலகுகள் அல்லது அதற்குக் குறைந்த அலகுகளைப்பாவிக்கும் வீட்டு உப-யோக மின் பாவனையாளர்கள்.
2. அனைத்து மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் தரும நிறுவனங்கள்.

பொது முகாமையாளர்

## இலங்கை மின்சார சபை

50 சேர் சிற்றம்பலம் எ காடினர் மாவத்த
கொழும்பு. 02.

**தூரநோக்குடன் செயல்பட்டு மின்சாரத்தினைச் சேமிப்போம்.**

மனிதனுக்கு நிகழ்காலம்தான் சொந்தம் அதையும் அவன் இழந்து விடுகிறான்.

~ ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## தொடரும் சம்பள இழுபறி ஆசிரியர்கள் போராட்டம்

சம்பள உயர்வு கோரி ஆசிரியர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கல்வி அமைச்சருக்கும்,ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சு வார்த்தை இடம்பெற்ற போதிலும் அவை எதுவுமே இதுவரை ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுகாணவில்லை.

முன்னதாக பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதில்லை என ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் உச்ச நீதிமன்றத்தின் தலையீடு மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை நீதிமன்றுக்கு அழைத்து விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் சில உத்தரவுகளைப் பிறப்பித்தது.

அதில் ஆசிரியர்கள் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடவேண்டும் எனவும் அதேநேரம் ஆசிரியர்களின் சம்பள விடயத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய ஆசிரியர்கள் வினாத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் அரசு ஆசிரியர்களின் சம்பள உயர்வில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனையடுத்து இன்று ஆசிரியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பொதுவாக இலங்கையில் இடம்பெறும் ஓர் மிகப்பெரும் துரதிர்ஷ்டம் உறுதிமொழிகளை வழங்கி ஏமாற்றுவதாகும்.

அதாவது இனப்பிரச்சினை தொடக்கம் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை வரை இதுவே நடைபெறுகின்றது. இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை அரசு எந்தவிதமான தீர்வுத்திட்டத்தையும் முன்மொழியாமல், இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப்படுமென உறுதி வழங்கும், உதவி பெற்று முடிந்ததும் அளித்த உறுதிமொழி தூக்கி எறியப்படும். இந்த நிலையே எங்கும் காணப்படுகின்றது.

அந்த வகையில் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையிலும் இது விதிவிலக்கல்ல என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் திருத்தும் பணியை ஆசிரியர்கள் புறக்கணித்தபோது அதனை நீதிமன்றத்தின் உதவியுடன் முறியடித்த அரசு மற்றுமோர் போராட்டத்திற்கு இடமளிக்காமல் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க வேண்டும்.

வினாத்தாள் திருத்தம், பரீட்சை மேற்பார்வை என்றவாறு ஆசிரியர்கள் அழுத்தம் கொடுக்கக் கூடிய கட்டங்கள் இருப்பதை அரசு மறந்து செயற்படுவதன் விளைவாகவே ஆசிரியர்களின் சுகவீன போராட்டம் இன்று முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கு அரசு இசையுமா? அல்லது ஆசிரியர் போராட்டம் பெருக்குமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# பா.ஜ.க. ஆட்சியை கைப்பற்றினால் அது இலங்கைக்கு சாதகமாக அமையாது

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

இந்துத்துவவாத பாரதீய ஜனதாக் கட்சி இந்தியாவைக் கைப்பற்றும் நிலைமை உரு வாகினால் அது இலங்கைக்கு சாதகமாக அமையாது.

எனவே அரசாங்கம் உடனடியாக அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அரசி யல் தீர்வை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள் ளாவிட்டால் அவர்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் படை நடவடிக்கையினை நிறுத்த எந்தவொரு நாடும் அழுத்தம் கொடுக்க முடியாது என ஜனநாயக இடதுசாரி முன் னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளர் வாசுதேவ நாண யக்கார மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் தேசியப்பிரச்சினையில் இருந்து இந்தியாவால் விடுபட முடியாது அதே வேளை இந்திய சாதகத் தன்மையில் இருந்து விடுபட்டு தீர்வு காணவும் இலங்கையால் முடியாது.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி யுள்ள மனிதாபிமான பிரச்சினைகள் மட்டு மன்றி தமிழ் இனத்தின் இலச்சினையாக விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் தொடர்பில் தமிழ் நாட்டு மக்கள் மத் தியில் உணர்ச்சி பூர்வமான எண்ணம் குடி கொண்டுள்ளது.

காங்கிரஸ் கட்சித்தலைமையிலான இந்திய மத்திய அரசுக்கு தமிழ் நாட்டு எம்.பிக் களின் உதவிகள் மட்டுமின்றி தமிழ் இனவாத ஆவேசமான உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் தேவையும் உண்டு.

எனவே இலங்கைப்பிரச்சினைக்கு தீர்வைப்பெற்றுக் கொடுக்கவேண்டியது இந்திய மத்திய அரசிற்குதவிர்க்க முடியாத விடயமாகும். இதன் மூலமே இந்திய மத்திய அரசின் இஸ்திரத்தன்மை பாதுகாக்கப்படும்.

மத்திய அரசு வீழ்ச்சியடைந்து இந்துத் துவவாத பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சியைகைப்பிடிக்குமானால் அது இலங்கைக்கு சாதகமாக அமையாது. உடனடியாக யுத்தத்தை நிறுத்த முடியாத போதும் நடை முறைச்சாத்தியமான தீர்வுத் திட்டத்தை முன் வைத்து இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசர நிலை இந்தியா வுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி மற்றும் வேறு எவர் எதிர்த்தாலும் 13ஆவது திருத்தங்களை முன்னெடுக்கவேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனை ஐ.தே.க. கட்சியாலும் எதிர்க்க முடியாது. எனவே அதிகாரப்பரவலாக்கல் யோ சனை களை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதற்கான கால எல்லைகளையும் வெளியிட வேண்டும்.

இவ்வாறான நிலை ஏற்படும் போது தமிழ் நாட்டை சாந்தப்படுத்தவும் விடுதலைப் புலி களை ஒரு நிலைபாட்டிற்கு கொண்டு வரவும் இந்தியாவுக்கும் வழி பிறக்கும். அத்தோடு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள் வதற்கான அடித்தளமாகவும் இது அமையும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் படைநடவடிக்கைகளை தடுப்பதற்கான வெளிநாடுகளின் அழுத்தமும் இல்லாது போகும்.

அத்தோடு வடபகுதியிலும் வன்னியிலும் வாழும் மக்களை யுத்தத்தின் பாதிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு விடுதலைப்புலிகள் மற்றும் அரச கட்டுப்பாடு அல்லாத பிரதேசத்தை பெயரிடுவதை அரசாங்கத்தால் அறிவிக்க முடியும். இதற்காக விடுதலைப்புலி களின் இணக்கப்பாட்டை இந்திய அரசாங் கமே பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகளை அணுகி தீர்வு காண வேண்டுமே தவிரகள் அருந்திய எலிகளைப்போல் செயற்படுவது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஓ)

# இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

## அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல்களின் காரணமாக உள்நாட்டில் இடப்பெயர்வுகளுக்கு ஆளானவர்களையும், தமிழக அகதி முகாம்களில் தஞ்சமடைந்தவர்களையும் மீளக்குடியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடனும் ஐக்கிய நாடுகளுடனும் கலந்தாலோசித்து வருவதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன் இடப்பெயர்வுகளுக்கு உள்ளானவர்களில் மீள்குடியேற்றத்திற்கான இயலுமை குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த சிலர் மீளக் கூடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் எனினும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் பேர் தமிழக அகதி முகாம்களில் தஞ்ச மடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


தற்பொழுது கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பிரசேங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களின் மீள் வருகை குறித்து அவர்கள் வற்புறுத்தப்படவில்லை இந்த பிர தேசங்களில் குடியேறுவது அவரவர் விருப்பம். மேலும் கிழக்கு மாகாணம் தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இந்த பிரதேச மக்க ளுக்கு அதிகப்படியான தொழில் வாய்ப்புகள் ஏற்படும் என வும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் புள்ளி விபரங்களின் அடிப்படையில் தமிழக முகாம்களில் 71 ஆயிரத்து 600 இலங்கையர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 20 ஆயிரம் முதல் 1இலட்சம் வரையான இலங்கையர்கள் முகாம்களுக்கு வெளியே அவர்களது உறவினர்களின் வீடுகளில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிலர் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஓ)

# பகவானின் அருளுரைகள்



கடவுள் உன்னுள் இருக்கிறார்; உன் ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும், எண்ணத்திலும் கடவுள் இருக்கிறார். அவர் ஏற்றுக்கொள்ளும்படி உன் எண்ணம், சொல் , செயல் இருக்க வேண்டும். கடவுள் மனித ரூபத்தில் அவதரித்திருப்பது தர்மத்தை நிலை நிறுத்துவதற்கும், அமைதியின் பாதையில் மனித சமுதாயத்தை வழி நடத்திச்செல்வதற்குமேயாகும்.

கடவுளைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவரிடமிருந்து விலகிச் செல்பவர்கள்தான்,கடவுள் இல்லையென்று கூறி தர்மத்தை, சத்தியத்தை கடைப்பிடிக்காது எப்படியும் வாழலாம் என வாழ்பவர்களாய் இருப்பவர்கள்.

"மனித குலம் முழுவதும் ஒரே மதத்திற்குச் சொந்தமானது . அது தான் அன்பெனும் மதம். எந்த மதத்தையும் சிறுமைப் படுத்தாதே .ஆனால் எந்தவொரு தனி மதத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காதே . அன்பே கடவுள் ; இறைவனே அன்பு. நீ உண்மையில் எப்படியோ அப்படியே யாவற்றையும் காண்பாய். ஆகவே எதையும் உயர்வாகவே பார். வழிபாட்டின் மூலம் இறைவனை அடைவதே மனிதப் பிறவியின் நோக்கம் .அன்புடன் நாளை ஆரம்பி; அன்புடன் நாளை நிரப்பு ; அன்புடன் நாளைக்கழி ; அன்புடன் நாளை முடி; இதுவே இறைவனை அடையும் வழி. நீ தீயவனாய் இருந்தாலும் திருந்தி வாழ வழியுண்டு. நித்தமும் இறைவனையே நினைத்து நகு. தவறை உணர்ந்து பரிபூரண பக்தியோடு இறைவனிடம் ஒரு நிமிடம் உன்னை ஒப்புக்கொடு. நீயே இறைவனாவாய்'' என்கிறார் பகவான்.

இறைவனின் கருணை வங்கியில் (Grace bank) உன் அன்பினை வைப்பிலிடு . நன்மையையும் தீமையையும் பிரித்தறிந்து செயற்படு இறைவனின் கருணை வங்கி தானாக செயற்படும். உன்தேவை எதுவென அறிந்து தனது சேவையை அவ்வப்போது செய்யும் உலகத்திலுள்ள பாதகங்கள் எவையோ, அவையெல்லாவற்றையும் ஆக்கிரமித்தமாதிரி அப்பாதக செயல்களையெல்லாம் செய்து வரும் ஒருவன் சுவாமி பரமஹம் ஸரிடம் சென்று சுவாமி நான் செய்த பாவச் செயல்களோ எண்ணில் அடங்காதவை என்பதை உணர்கிறேன். இனிமேல் திருந்தி உங்களின் சிஷ்யர் ஆகவேண்டும். இதற்கு பரிகாரம் உண்டா சுவாமி? எனக் கேட்டான். பரமஹம்ஸரோ, மகனே நீ செய்த தீயசெயல்களையெல்லாம் நினைவுபடுத்தி இறைவனிடம் முழு மனதுடன் ஒப்புவி. பின் பாவ பரிகாரத்தின் பின் எதுவித தீய செயலிலும் ஈடுபடாதே. அதனை நினைத்துக் கூடப் பார்க் காதே. அவனும் அவ்வாறே செய்து பரமஹம் ஸரின் சீடனாகி விட்டான்.

சாயி நாமம் சிந்திப்போம்.

ஜெய்சாயிராம்

யாதவன்

## 'லிவ்ற்' திட்டம் -2இன் அறிமுக நிகழ்வு

(சாவகச்சேரி)

கெயர் நிறுவனத்தின் "லிவ்ற்" திட்டம் -2 இன் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 4 ஆம்திகதி செவ்வாய் சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 30

இப் பிரகடனத்திலுள்ள உரிமைகள், சுதந்திரங்களை எந்த ஒரு நாடோ, தனியாளோ அழிக்கும் முயற்சியில் ஈடுபட உரிமையை அளிக்கும் உட்கிடையைக் கொண்டுள்ளதாக பொருள்கொள்ளப்படுதலாகாது.

# தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில்

# 15 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 8.75 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச தென்மராட்சி செயலக பிரிவில் 15 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 'கமநெகும' திட்டத்தின் கீழ் 8.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

இதற்கமைய நாவற்குழி முன்பள்ளி அமைப்பதற்கு 12 இலட்சம் ரூபாயும் கைதடி நுணாவில் முன்பள்ளியில் மலசலகூடம் அமைப்பதற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயும், மட்டுவில் மத்தி முன்பள்ளி புனரமைப்பதற்கு 3இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டுவில் கிழக்கு சேச் வீதி வாய்க்கால் அமைப்பதற்கு 3இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மீசாலை மேற்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய கட்டடம் அமைப்பதற்கு 12 இலட்சம் ரூபாயும் வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலைய புனரமைப்பிற்கு 9இலட்சத்து 60ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைவிட கெருடாவில் கிராமத்திற்கு மூன்று நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 7 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் மட்டுவில் தெற்கு தாவடி வீதிக்கு மூன்று நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 4இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் சரசாலை தெற்கிலிருந்து பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கை வரையான 600 மீற்றர் தூரத்திற்கு மூன்று நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 6 இலட்சம் ரூபாவும் ,

பாவாவி-முருகங்கை வரையான 500 மீற்றர் தூரத்திற்கு மூன்று நிலை மின்சார இணைப்பிற்கு 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், பாவாவி-கிளாலி எல்லை வீதி வரை மூன்று நிலை மின்சார இணைப்பு வழங்கு வதற்கு 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் பாவாவி -தவசிக்குளம் எல்லை வீதி வரை மூன்றாம் நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 6இலட்சம் ரூபாவும், கணுக்காய் சந்தி விவசாய வீதி வரை மூன்றாம் நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 9இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் காட்டுப்புலம் -நாவலடி வீதி வரை மூன்றாம் நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 7 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் முத்தட்டு அம்மா கடை வீதியில் மூன்றாம் நிலை மின்சார இணைப்பு வழங்குவதற்கு 7 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

இதில் மின் இணைப்பு வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி இலங்கை மின்சார சபையிடம் வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## பெற்றோர் தினவிழா

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் பெற்றோர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், அச்சுவேலி பங்குத் தந்தை அருட்பணி ஆர் பீற்றர் துரைரத்தினம் கௌரவ விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் சி. சித்திரவடிவேல், யாழ் ஆசிரிய நிலைய நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் இ. துஷ்யந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் (ஓ)

## பிற்போடப்பட்டது

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் இன்று வியாழக்கிழமை நடத்தப்படவிருந்த பரீட்சைகள் எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் -பெண் நாய்களுக்கான கர்ப்பத்தடை தடுப்பு மருந்தேற்றல் இன்று வியாழக்கிழமை கீழ்க்குறிப்பிடும் இடங்களில் வைத்து இடம்பெறவிருப்பதால் கடந்த சித்திரை மாதம் பெண் நாய்களுக்கான கர்ப்பத்தடை மருந்தினைப் பெற்றுக் கொடுத்தோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் இரண்டாவது தடுப்பு மருந்தினையும் ஏனையோர் தமது பெண் நாய்களைக் கொண்டு வந்து கர்ப்பத் தடை தடுப்பு மருந்தினையும் பெற்றுக்கொடுக்குமாறு அம்பன் பிரதேச பொது சுகாதாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தடுப்பு மருந்தேற்றல் நடைபெறுமிடங்கள் வருமாறு,



காலை 9 மணிக்கு அம்பன் பொது சுகாதாரப் பரிசோதகர் பணிமனை, 9.35 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளாகம், 10.15மணிக்கு அம்பன் பிள்ளையார் கோயிலடி, 10.35 மணிக்கு அம்பன் விநாயகர் முன்பள்ளி, 11மணிக்கு வேல்நாயகம் வீடு, 11.40 மணிக்கு மாளிகைத்திடல் பொதுமண்டபம், 12.10 மணிக்கு நாகதம்பிரான் முகாம், 12.45 மணிக்கு குடத்தனை கிழக்கு . (ஓ)

## வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்க 2008 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் சங்கத்தலைவர் சி.சிவகுமார் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், கூ.அ.திணைக்கள உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூ.அ.திணைக்கள உதவி ஆணையாளர் (கணக்காய்வு) எஸ்.கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி எஸ்.சிவச்சந்திரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம், க.ந.அ.திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக்டிறஞ்சன், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், *(UNDP)* தலைமை அலுவலர் கு.வி.நிஷாந்தன் *world vision* மாவட்ட இணைப்பாளர் ம.வசந்தநாயகம், *FAO* மாவட்ட உத்தியோகத்தர் ஏ. சிவானந்தன், *SDC* தலைமை அதிகாரி கூ.கோ.கிஸ்லர், *IOM* உப அலுவலக தலைவர் செல்வி நி.சுவாமிநாதன், *CARE* திட்ட இணைப்பாளர் திருமதி ஜோ.றோ. ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

இலங்கை வங்கியின் வழிகாட்டலில் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி வடபிராந்திய கூடுதல் செயற்பாட்டு முகாமையாளர் கே.உலகநாதன் விரிவுரை நிகழ்த்துவதையும், விரிவுரைகளில் பங்குகொண்ட மாணவர்களுடன் வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

## 'மனங்கொள்வோம்' உலக உள நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அலகு நடாத்தும் "மனங்கொள்வோம்" உலக உளநல நாள் நிகழ்வுகள் 2 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி ரி.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் எஸ்.சிவயோகன், டாக்டர் பி.முல்லை, கலாநிதி ஜெ.இராசநாயகம், எ.சி.ஜோர்ச் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## நூல் ஆய்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஒரு புத்தகம் ஒரு சமுதாயம் எனும் கருப்பொருளில் நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இளம் எழுத்தாளர் ஆனந்தமயில் நித்திலவர்ணன் எழுதிய "இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்" எனும் நூல் ஆய்வு இன்று வியாழக்கிழமை 9.30 மணிக்கு கொக்குவில் உப அலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது என நூலகர் திருமதி பூங்கோதை பாலபாஸ்கரன் அறிவித்துள்ளார். (ஓ-36)

## யாழ்.செய்திகள்

## பரு.இலங்கை வங்கியில் தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரசேவை இன்று ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியின் தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திர சேவை இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இவ் வங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிலே இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திர சேவையைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (ஓ-52)

## கவின்கலை வகுப்புகள் ஆரம்பம்

கொக்குவில் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் கவின்கலை வகுப்புக்களை 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் வீதி தாவடியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் சி.சூரியகுமார் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதில் அறநெறிப் பாடசாலை தவிர்ந்த ஆர்வமுள்ள வெளிமாணவர்களும், தனிப்பட்டவர்களும் கலந்துகொண்டு பயன் பெறலாம். மிருதங்கம், நடனம், சங்கீத வாய்ப்பாட்டு போன்ற வகுப்புக்கள் சனி, ஞாயிறு, தினங்களில் நடைபெறும். (ஓ-4)

## ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மண்ட பத்தில் நடைபெறும் என்று சைவ பரிபா ல னசபை தேர்வுச்செயலர் இரா .செல்வவடி வேல் அறிவித்துள்ளார். (ஓ)

# காம்பீர் டில்லியிலும் அதிரடி சதம்; இந்திய அணி ஸ்திரமான நிலையில்



(டில்லி)

காம்பீர் சதமடித்து கலக்க மூன்றாவது டெஸ்டின் முதல்நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 296 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட போடர்-கவாஸ்கர் வெற்றிக்கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இத் தொடரின் முதலாவது போட்டி சமநிலையானதுடன் இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

**கும்பிளே வந்தார்; ஹர்பஜன் வெளியே**

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் நேற்று டில்லியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் இரண்டாவது போட்டியில் காயம் காரணமாக விளையாடாத இந்திய அணித்தலைவர் அனில் கும்பிளே இப் போட்டியில் அணிக்கு திரும்பினார்.

இவரின் வருகையை அடுத்து இந்திய அணியிலிருந்து மற்றொரு சுழல் பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் வெளியேறினார்.

**சேவாக், டிராவிட் ஏமாற்றமளித்தனர்**

இப்போட்டியில் நாணயச் சழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணிக்கு அதிரடி நாயகன் சேவாக் அதிர்ச்சியளித்தார்.

இந்திய அணி 5 ஓட்டங்களையே எடுத்த நிலையில் சேவாக் ஒரு ஓட்டத்துடன் பிரெட் லீயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து காம்பீருடன் இணைந்த ராவிட் நிதானமாக துடுப்பெடுத்தாடினார்.

எனினும் ராவிட்டும் 11 ஓட்டங்களை எடுத்து ஜோன்ஸனின் பந்துவீச்சில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 27 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

**வந்தார் டெண்டுல்கர்**

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக காம்பீருடன் ஜோடி சேர்ந்த டெண்டுல்கர் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார்.

மறுமுனையில் காம்பீர் சிறப்பாகத்துடுப்பெடுத்தாட இந்திய அணி 100 ஓட்டங்களைக் கடந்து சரிவிலிருந்து மீண்டது.

ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய டெண்டுல்கர் 79 ஆவது பந்தில் அரைச்சதம் கடந்து அசத்தினார்.

மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய காம்பீரும் அரைச் சதம் கடக்க இந்திய அணி 150 ஓட்டங்களைத் தொட்டது.

எனினும் இந்த ஜோடி 150 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அதிரடியாக ஆடிய டெண்டுல்கர் 68 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஜோன்ஸனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ஹடினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து இம் முறையும் சதம் பெறும் வாய்பையிழந்து ரசிகர்களை ஏமாற்றினார்.

**இணைந்தனர் காம்பீர், லக்ஸ்மன் ஜோடி**

தொடந்து நான்காவது விக்கெட்டுக்காக காம்பீருடன் இணைந்த வி.வி.எஸ். லக்ஸ்மன் வழமையான நிதானமான ஆட்டத்தை



வெளிப்படுத்தினார்.

**காம்பீர் பிரகாசம்**

மறுமுனையில் அதிரடியை ஆரம்பித்த காம்பீர் 190 ஆவது பந்தில் எனது 3ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்ததுடன் இத் தொடரில் இரண்டாவது சதத்தைக் கடந்தார்.

தொடர்ந்து சிறப்பாக ஆடிய இந்த ஜோடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்து இந்திய அணி 250 ஓட்டங்களை பெற்றது.

இந்த ஜோடியை பிரிக்க அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்கவில்லை.

நிதானமாக ஆடிய வி.வி.எஸ்.லக்ஸ்மனும் அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 296 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் காம்பீர் 285 பந்துகளில் (20 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 149 ஓட்டங்களுடனும் வி.வி.எஸ் லக்ஸ்மன் 54 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர்.

இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் கங்குலி, தோனி களமிறங்கவுள்ள நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம்இன்றாகும். (5)

# இலங்கைக்கு பதில் மேற்கிந்திய தீவுகள்

(சிங்ஸ்டன்)

இங்கிலாந்து, இலங்கை அணிகள் மோதும் கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை மாற்றி அமைக்கப்படவுள்ளது. இத் தொடரில் இலங்கை அணிக்குப் பதிலாக மேற்கிந்தியத் தீவுகள் அணியை பங்கேற்க வருமாறு, இங்கிலாந்து கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை அணி, இங்கிலாந்து சுற்றுப்பயணம் சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பங்கேற்கும் விதத்தில் அட்டவணை முடிபு செய்யப்பட்டது. அதே மாதத்தில் இந்தியாவில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) நடத்தும் இருபது-20 தொடர் நடக்க உள்ளது.

ஐ.பி.எல் அமைப்புடன் 3 ஆண்டுகளுக்கு இலங்கையின் முன்னணி வீரர்கள் பலர் ஒப்பந்தம் செய்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் இங்கிலாந்து செல்ல முடியாத நிலை நீடித்தது.

இது தொடர்பாக இலங்கை மற்றும் ஐ.பி.எல்., இடையே பிரச்சினை வெடித்தது. கடந்த ஒருவாரம் நடந்த பேச்சுவார்த்தைகளின் முடிபில் இலங்கை அணி, இங்கிலாந்து தொடரை ஒத்திவைக்க முடிபு செய்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் சபை இலங்கை அணிக்குப் பதில் மேற்கிந்திய தீவுகள் அணியை விளையாட வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து பேட்டி அளித்த மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் நிர்வாக அதிகாரி பீட்டர்ஸ் கூறுகையில், இங்கிலாந்து அணியின் அழைப்பை ஏற்று, அங்கு 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாட முயற்சி செய்து வருகிறோம். இருப்பினும் இது குறித்து இறுதி முடிபு விரைவில் எடுக்கப்படும் என்றார். (5)

# இரண்டாவது டெஸ்ட் சமநிலையானது; தொடரை வென்றது நியூசிலாந்து



(மிர்பூர்)

இறுதி இரண்டு நாட்களே ஆட்டம் நடைபெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் சமநிலையில் நிறைவுபெற நியூசிலாந்து அணி தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 25ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டியின் முதல் மூன்று நாள் ஆட்டமும் மழையால் பாதிப்படைய நான்காம் நாளான நேற்று முன்தினமே ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ரைடர் 91 ஓட்டங்களையும் மக்குலம் 66 ஓட்டங்களையும் பிளைன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்ளையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோட்டாஷா, சுலாம்,ரஸாக், ஹீசைன் மற்றும் அஷ்ரபுல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ஹசன்49,மோட்டாஷா 48 ஓட்டங்ளையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோறி 5 விக்கெட்டுக்களையும் ஓ பிறின் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் பட்டேல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதலாவது இன்னிங்ஸில் 99 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த நியூசிலாந்து அணி தொடர்ந்து 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 79 ஓட்டங்களை எடுத்தபோது 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நிறைவடைய 2-வது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் சுவீகரித்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனான நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோறி தொடர் நாயகன் விருதையும் பெற்றுக் கொண்டார். (5)


## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ்.நகர் மாநகர எல்லைக்குள் பிரதான வீதியில், புதிய நீதிமன்றத்துக்கு முன்பாக வீதியில் இருந்து தெற்குப் பக்கமாக மூன்றாவது காணி. கிணற்று வசதியுடன் 4 பரப்பு காணியும் மேலும் பாங்சால் வீதி மூன்றாம் குறுக்குத் தெருவுக்கும், இரண்டாம் குறுக்குத் தெருவுக்கும் இடையில், பாங்சால் வீதியை முன்பக்கமாகக் கொண்ட 8 பரப்புக் காணி தண்ணீர் வசதியுடன் உடன் விற்பனைக்கு.

ஜெகான்

T.P. :- 077 6589415, 077 6111419, 077 9522521,

021 222 2426, 021 222 6837

(1874)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இலங்கைத் தமிழர்களுக்கு வழங்க சென்னைப் பொலிஸார் 10 இலட்சம் உதவி

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்காக திரட்டப்படும் உதவி நிதிக்கு சென்னை மாநகரப் பொலிஸார் 10 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு பொலிஸாரும் தமது பதவியின் அடிப்படையில் இவ் உதவித் தொகையை வழங்கியுள்ளனர். இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்காக நிவாரணம் வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்.

அவர் நேற்று முன்தினம் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூபாய் 10 இலட்சம் வழங்கி தொடங்கி வைத்தார். அவரது வேண்டுகோளை ஏற்று ஏராளமானோர் நிவாரண நிதி வழங்கி வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் வரை ரூபாய் 33 இலட்சம் நிதி குவிந்தது. நேற்று 2-வது நாளாக தொழில் அதிபர்கள், திரையுலகத்தினர், அரச ஊழியர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள் திரண்டு வந்து முதலமைச்சர் கருணாநிதியிடம் நிவாரண நிதி வழங்கினார்கள்.

நேற்று மதியம் வரை 88 இலட்சத்து 86 ஆயிரத்து 307 ரூபாய் நிதி குவிந்தது. தொழில் அதிபர் எம்.ஏ.எம்.இராமசாமி ரூபாய் 10 இலட்சமும் மாலினி பார்த்தசாரதி ரூபாய் ஒரு இலட்சமும் நடிகர் சுந்தர் சி. ரூபாய் ஒரு இலட்சமும் நடிகை குஷ்பு ரூபாய் ஒரு இலட்சமும் நடிகர் நெப்போலியன் ரூபாய் 5 இலட்சமும் வழங்கினார்கள்.

திருவெண்ணாமலை அருணை பொறியியற் கல்லூரி சார்பாக ஈ.வி.குமரன் ரூபாய் 10 இலட்சமும் பெரியார் மணியம்மை இன்ஸ்டிட்டியூட் ஆப் சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி சார்பாக கி.வீரமணி ரூபாய் 6 இலட்சத்து 10 ஆயிரமும் பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனம் சார்பாக அதன் செயலாளர் கி.வீரமணி ரூபாய் 2 இலட்சத்து 30 ஆயிரமும் நடிகர் விவேக் ஒரு இலட்சமும் சரவணபவன் ஹோட்டல் உரிமையாளர் ரூபாய் 5 இலட்சமும் சரவணபவன் ஹோட்டல் தொழிலாளர்கள் 5 இலட்சமும் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தினர் ஒரு இலட்சமும் என ஏராளமானோர் நேற்று நிதி வழங்கினார்கள். (ச-5)

# இரு தினங்களுக்கு மேற்பட்ட விடுமுறைக்கு மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இரண்டு தினங்களுக்கு மேற்பட்ட சுகவீன விடுமுறைகளுக்கு அரச ஊழியர்கள் வைத்திய சான்றிதழ் சமர்ப்பிப்பது அத்தியாவசியம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வைத்திய சான்றிதழ் இல்லாமல் இரண்டு தினங்களுக்கு மாத்திரமே சுகவீன விடுமுறைக்கு விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விடுமுறைகளுக்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்டவரே தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்க வேண்டும். தொழிற் சங்கங்களின் அறிவித்தல்கள் மூலம் அரச ஊழியர்கள் எவரும் தமக்குரிய சுகவீன விடுமுறைப் பெற முடியாது..

மேலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தடை செய்வதற்கு எந்தவொரு நபருக்கோ குழுவினருக்கோ உரிமையில்லை எனவும் பாடசாலைகள் வழமைபோல் நடாத்துவதற்கான அதிகாரம் பாடசாலையின் அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## இரு இலக்குகள் மீதான...

நிலையத்தின் மின்பிறப்பாக்கி ஒன்று தீப்பிடித்ததால் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அங்கு விரைந்து வந்த கொழும்பு தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் போது மின்சார சபை ஊழியர் ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டது.

மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் இன்று (நேற்று) வழமைபோல் இடம்பெறுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் மீதும் நேற்று முன்தினம் இரவு 10.20 மணியளவில் புலிகள் விமானம் மூலம் மூன்று குண்டுகளைப் போட்டுள்ளனர். இத் தாக்குதலினால் இராணுவ முகாமுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்றும் படை வீரர் ஒருவர் சிறுகாயங்களுக்குட்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தாக்குதலையடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்த இரண்டு விமானங்கள் சென்னை விமான நிலையத்திற்குத் திரும்பி அனுப்பப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் தள்ளாடி இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய விமானத் தாக்குதல் தோல்வி கண்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த புலிகளின் விமானம் ஒன்று வருவதாகக் கிடைத்த தகவலையடுத்துப் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாகப் பாரிய அழிவொன்று தவிர்க்கப்பட்டது. இத் தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர் என்றார். (ச-5)

## இந்தியா...

குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயுடன் இணைந்து இந்தியாவும் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்துவார் என்றும் கூறப்பட்டது. (ச-5)

## தமிழக முதலமைச்சர் கருணா...

உறுதி செய்து அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலான் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதில் எனது அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியான தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது என்பதே எனது உறுதியான நிலைப்பாடாகும். பயங்கரவாதிகளுக்கு இராணுவ ரீதியான தீர்வு, தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு எனும் நிலைப்பாட்டையே நான் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றேன்.

இந்தியா உட்பட 30 ற்கும் மேற்பட்ட நாடுகளில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகளுக்கு எதிரானவையே எமது இராணுவ நடவடிக்கைகள். அவர்கள் தங்களது ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு ஜனநாயக அரசியல் வழிமுறைகளுக்குத் திரும்ப வேண்டும் என்று இப்போதும் கூட வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களையோ இழப்புக்களையோ ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவையல்ல.

மோதலினால் பாதிக்கப்பட்ட அல்லது இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை உறுதி செய்வதிலும் எமது அரசாங்கம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றது.

இலங்கை அரசின் விசேட தூதுவர் பசில் ராஜபக்ஷ புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் சிரேஷ்ட இந்திய அதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடல் மிகவும் ஆக்கபூர்வமானதாகவும் அனுகூலமானதாகவும் அமைந்திருந்தது.

இப் பேச்சுவார்த்தையின் ஒரு நல்லெண்ண வெளிப்பாடாக இலங்கையின் வட பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 800 தொன் நிவாரணப் பொருள்களை வழங்க இந்தியா எடுத்த முடிபு வரவேற்கத்தக்கது.

இந்த மனிதாபிமான உதவிகளில் தமிழ்நாடும் தனது பங்களிப்பை மேலதிகமாக வழங்குவதும் பாராட்டுக்குரியது.

### கருணாநிதிக்கு அழைப்பு

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.கருணாநிதியை இந்தியாவின் ஒரு சிரேஷ்ட அரசியல் வாதியாக மதிக்கின்றேன். இலங்கையின் தற்போதைய பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்ற கருணாநிதியின் முன்மொழிவையும் சிந்தனையையும் பாராட்டுகின்றேன்.

முதலமைச்சர் கருணாநிதியை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்திய அரசாங்கத்தினூடாக அழைப்பு விடுக்கின்றேன். இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளையடுத்து 13-வது திருத்தம் இலங்கை அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அப்போது இரு சாராரும் விரும்பாத காரணத்தினாலேயே அதனை வட., கிழக்கில் அமுல்படுத்த முடியவில்லை. ஆனால் ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் அதனை முதன்முறையாக அமுல்படுத்த எனது அரசாங்கம் எண்ணியுள்ளது.

நாம் அந்த உறுதிப்பாட்டை எமது நாட்டுத் தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கியிருக்கின்றோம். நான் இதைச் செய்யப் போவது எவரையும் திருப்திப்படுத்துவதற்காக அல்ல. மாறாக இது இந்த நாட்டு மக்கள் மீது எனக்குள்ள கடமையாகும்.

விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஒரு வருட காலப் பகுதியில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை வெற்றிகரமாக நடாத்தி ஒரு தமிழ் முதலமைச்சரையும் பதவியில் அமர்த்தினோம்.

தற்போது அங்கு முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## மரண அறிவித்தல்

### அருணாசலம் பொன்னம்பலம் (வீரக்கோன்)



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பொன்னம்பலம் அவர்கள் 29.10.2008 புதன்கிழமை காலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-கமலாம்பிகை தம்பதியினரின் ஏக புதல்வரும், அமரர்களான ஏரம்பு - அமிர்தவல்லி தம்பதியினரின் மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், நாகேஸ்வரி, அருணகிரிநாதன் (அதிபர்-யா/வேலணை மத்திய கல்லூரி), கமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, மஞ்சுளாதேவி ஆகியோரின் மாமனாரும், கஜனி, பிரசன்னா, கஜானன், நிருஷா, அருண்றாஜ், கார்த்திகா, சுவஸ்திகா, கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனாரும், சீவரெத்தினம், கௌரியம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30.10.2008 இன்று வியாழக்கிழமை பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முடிப்பிள்ளையார் கோவிலடி,
வேலணை மேற்கு,
வேலணை - 08

தகவல்;
மகன்:
பொ.அருணகிரிநாதன்
(அதிபர்- யா/வேலணை மத்திய கல்லூரி)

(C-1726)

## இந்திய ராடர் கருவிகள்...

தாக்குதல்களை நடத்தித் திரும்பிச் சென்றுள்ளன. 7-வது தடவையாக இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டதாகவும் அவர்களது விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டு விட்டதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அத்தோடு இந்தியாவின் ராடர் கருவிகள் பொருத்தப்பட்டு அந்நாட்டின் விமானப் படை அதிகாரிகளே இதனை இயக்குகின்றனர். இந்த ராடர்களில் புலிகளின் விமானம் தெரிய வில்லையா? அல்லது இந்திய விமானப் படை அதிகாரிகள் புலிகளின் விமானத்தைக் கண்டும் காணாதவர்கள் போல் செயற்பட்டனரா? இக் கருவிகள் செயலிழந்து விட்டனவா? போன்ற நியாயமான சந்தேகங்கள் எழுகின்றன.

எனவே இச் சம்பவம் தொடர்பாக உண்மையை அரசாங்கம் மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் விஜிதகேரத் எம்.பி. தெரிவித்தார். (ச-5)

## ஜெயபுரம்...

குளக்கட்டுப் பகுதியையும் படையினர் தம்வசப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலுக்கு மத்தியில் இந்தப் பிரதேசங்களை இராணுவத்தினர் கைப்பற்றி விடுதலைப்புலிகளுக்குத் தோல்வியை ஏற்படுத்தியிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டிருக்கின்றது. (ச-3)

## சுகவீன...

திகதி சுகவீன லீவுப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆசிரியர்களின் கௌரவத்துடனும் வாழ்வாதாரத்துடனும் மட்டுமே தொடர்புபட்ட பிரச்சினைக்கான தீர்வு நோக்கி ஆசிரியர்களினால் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இப்போராட்டத்தில் இணைவது யாழ்ப்பாணம் மாவட்ட ஆசிரியர்களினதும் வரலாற்றுக் கடமையாகும் என்றுள்ளது. (ச)

## எதிர்ப்புத்...

சமயம் இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மின் உற்பத்தி நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட வான் தாக்குதலில் காயமடைந்த இலங்கை மின்சார சபை ஊழியர் உயிரிழந்துள்ளார்.

இவ் ஊழியர் அதிர்ச்சிக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் இவருக்கு வெளியில் எவ்வித காயமும் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கொழும்பு...

உட்பட முதலமைச்சரின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றிருக்கும் மோசடிகளைக் கண்டுபிடித்து உரிய நட வடிக்கை எடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மாநகர சபையில் இடம்பெற்றிருக்கும் ஊழல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்கு முன்னாள் நீதிபதி சேனாதீர செனவிரட்ன தலைமையிலான தனிநபர் விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (ச-5)

## முறிகண்டி...

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் செறிவான எறிகணைத் தாக்குதல் மற்றும் கனரக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் ஆகியவற்றுடன் பெருமளவிலான படையினர் விடுதலைப்புலிகளின் அரண்களைக் கைப்பற்றும் முன்னகர்வுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் 6 மணி வரை நடத்திய தாக்குதல் மூலம் முறியடித்தனர்.

இதில் படையினர் 60 பேர் கொல்லப்பட்டனர். 100ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.